www.padippakam.com

# சிந்தனையாளன்

விலை ரூ.7/-

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 122 ஜூன் 2001

## கழன்றுகிடக்கும் தேசிய சனநாயகக் கூட்டணி




நன்றி ; ( இந்தியா டுடே 4-6-2001)

- ✦ தமிழ்நாட்டில் புதிய அமைச்சரவை
- ✦ 2001 தேர்தல் முடிவுகள்
- ✦ கருணாநிதி ஆட்சிக்கு சிரார்த்தம்!

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்


* தமிழ்நாட்டில் புதிய அமைச்சரவை - வே.ஆனைமுத்து 1

துணைத் தலையங்கம்

2001 தேர்தல் முடிவுகள் - து.தில்லைவனம் 6


### கட்டுரைகள்


* ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக தொழிலாளர்களின் மே நாள் சூளுரை - தமிழில்: க. முகிலன் 9
* கருணாநிதி ஆட்சிக்கு சிராார்த்தம்! -ஓலைப்பட்டி கந்தையா 12
* அறிவியல் தமிழின் தேவை- சு.நரேந்திரன் 16
* புலிகள் குவித்த மாபெரும் வெற்றி -ஆலாசா வல்லவன் 18
* 'கடவுள் அறிய' சுருட்ட வருகிறார்கள் -தமிழேந்தி 19
* மின்சார உற்பத்தியில் தனியார் பங்கேற்பு - ஓர் ஆய்வு பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன் 20
* பரிந்துரை இல்லாமல் இ.ஆ.ப. (அய்.எ.எஸ்) ஆகுங்கள்! - வேகான் 23
* சோதிடம் ஒரு விஞ்ஞானமா? திறந்த மனதுடன் ஒரு பார்வை - இராமியா 30


### கவிதை


* தமிழா! தமிழா! -தமிழேந்தி 22



**சிந்தனையாளன்**

(தமிழ் மாத இதழ்)

தனி இதழ் ரூ.7

ஓர் ஆண்டுக் கட்டணம் ரூ.80

வாழ்நாள் கட்டணம் 1.5.2000 முதல்ரூ.1000

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட

'சிந்தனையாளன்'

SINTHANAIYALAN

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.

தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!

ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!


## பாராட்டு

புதிதாகப் பதவி ஏற்றுள்ள செயலலிதா அரசு, இந்த ஆண்டு முதலே தமிழ்நாட்டிலுள்ள தொழிற் கல்லூரி களில் கிராமப்புற மாணவர்களுக்கான இடஒதுக் கீட்டை 15%லிருந்து உயர்த்தி 25% ஆக அளித்துள்ளது. இது மிகவும் பாராட்டுக்குரியது. ஏனெனில் இன்னமும் 70% மக்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர்.

ஆனால், இந்த உயர்த்தப்பட்ட ஒதுக்கீட்டில் பேரூராட்சிப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது ஆபத்தாய் முடியும். அவ்வாறு செய்தால் இப்போது கிடைத்து வரும் இடம் கூட, கிராமப்புற மாணவர்களுக்குக் கிடைக்காது போய் விடும்.

மேலும், நுழைவுத் தேர்வு என்பதே நகர்ப்புற மாணவர்களுக்குச் சாதகமான ஓர் ஏற்பாடேயாகும். இராசஸ்தான் மாநிலம், பிலினியில் உள்ள உலகப் புகழ் பெற்ற பிர்லா தொழில்நுட்பப் பயிலகம் போன்ற வற்றில், நுழைவுத் தேர்வு ஏதும் இன்றி மாணவர்கள் +2 தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்படுகின்றனர்.

+2 தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படை யிலேயே மாணவர்கள் தொழிற் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

தற்போது தேர்வு முடிவுகள் வரும் முன்னரே நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதற்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் புற்றீசல் போலத் தோன்றி விட்டன. தொழிற் கல்லூரிகளுக்குச் செல்ல முடியாத பலரும் கூட, பல்லாயிரக்கணக்கில் பணம் செலவழித்து நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி பெறும் அவல நிலை தொலைய வேண்டும்.

எனவே வரும் ஆண்டு முதலே நுழைவுத் தேர்வை இரத்துச் செய்ய வேண்டும். மேலும், எக்காரணம் கொண்டும் சுயநிதி நிறுவன மாணவர்களுக்கு இக்கிராமப்புறச் சலுகையின் கீழ் இடமளித்து விடக் கூடாது.

- கோ.அருண்மொழி

### தமிழன்பன் தோற்றம்

வே. ஆனைமுத்து - சுசிலா ஆகியோரின் இரண்டாவது மகன் வெற்றி - விசய இலட்சுமி துணைவர்களுக்கு, 20-4-2001 வெள்ளி பகல் 12 மணிக்கு ஆண் மகவு பிறந்தது. குழந்தைக்குத் தமிழன்பன் எனப் பெயரிடப்பட்டது.

www.padippakam.com



**சமதர்மக் காவலர்கள்**


மார்க்சு


லெனின்


சிங்காரவேலர்


பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**


புலே


பெரியார்


அம்பேத்கர்


லோகியா


# சிந்தனையாளன்

சுவடி : 23 மாத இதழ் ஏடு:10


இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

**கொள்கை முழக்கம்**

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்
- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
- பெரியார்


ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை சூன் 2001
விலை ரூ.7/-


# தமிழ்நாட்டில் புதிய அமைச்சரவை

தமிழ்நாட்டில் 10-5-2001 இல் நடைபெற்ற தேர்தல் முடிவு, அ.இ.அ.தி.மு.க அணிக்கே சார்பாக இருக்கும் என, வடநாட்டிலிருந்து வெளியாகும் எல்லா ஆங்கில ஏடுகளும் எழுதின. கேரளாவிலிருந்து வெளிவரும் "The Week" ஏடு, முன் கூட்டியே அ.இ.அ.தி.மு.க அணிக்கு 196 இடங்களுக்குக் குறையாமல் கிடைக்கும் என எழுதியது. தமிழ்நாட்டிலுள்ள ஏடுகளும், சிற்றேடுகளும், தொலைக்காட்சிகளும் - ஏதோ உள்ளெண்ணத்தோடு, பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தன. இவர்கள் முகத்திலடிப்பது போல், தேர்தல் முடிவுகள் வெளியாயின.

அ.இ.அ.தி.மு.க 132 இடங்களில் தனித்தே வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் உரிமையைப் பெற்று விட்டது.

அ.இ.அ.தி.மு.க கூட்டணி 196 இடங்களில் வெற்றியைக் குவித்துவிட்டது.

தேர்தல் முடிவுகள் 13-5-2001 ஞாயிறு அன்று வெளியாயின. அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தேர்தலில் நிற்க முடியாமல் - சட்டமன்ற உறுப்பினராக வர முடியாமல் போய் விட்டாலும், அ.இ.அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமனதான தீர்மானத்தின் பேரில், சட்ட மன்றக் கட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். அப்படித் தேர்வு செய்யப்பட்ட சில மணி நேரத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிட ஆளுநரால் அழைக்கப்பட்டு, 14-5-2001 அன்றே செயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

25-5-2001 அன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையில், வரும் அய்ந்தாண்டுகளில் அ.இ.அ.தி.மு.க அரசினர் மேற்கொள்ளவிருக்கும்

படிப்பகம்

www.padippakam.com



செயல்முறைகளையும் நோக்கங்களையும் குறிக்கின்ற கொள்கை நெறி முறைகளை ஆளுநர் உரை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

1. ஊரக மாணவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களிலும், தொழிற்படிப்புக் கல்லூரிகளிலும் இப்போது தரப்படும் 15% இட ஒதுக்கீடு, 25% ஆக உயர்த்தப்படும் என்கிற திட்டம் சாதி, மத, பால் வேறுபாடு இல்லாமல் சிற்றூர்ப்புற மக்கள் உயர் தொழிற்கல்வி பெற்றிடப் பெரிய வாய்ப்பாகும். இது வரவேற்கத் தக்கது.



2. தமிழ்நாடு முழு வதிலும் உள்ள அரசுக் கல்லூரிகளில் பயிலும் பட்டியல் வகுப்பு, பழங்குடி வகுப்புப் பெண்கள் முதுநிலைப் பட்டப் படிப்பு வரையில் இலவசமாகக் கல்வி அளிக்கப்படவும்; இவ்வகுப்புகளைச் சார்ந்த ஏறக்குறைய 67 ஆயிரம் மாணவிகள் - 11, 12ஆம் வகுப்புகளில் படிப்போருக்கு, 2001 சூனிலேயே இலவச மிதிவண்டிகள் வழங்கப்படவும் முடிவு செய்திருப்பது உண்மையில் கல்வி மறுக்கப்பட்ட இவ்வகுப்பிலுள்ள பெண்களுக்குப் பேருதவியாகும். இது பாராட்டுக்கு உரியது.

3. கல்வியை அடுத்து, சென்னை குடிநீர்ப் பஞ்சம், மற்ற ஊர்களிலுள்ள குடிநீர்ப் பஞ்சம் பற்றி அரசின் திட்டங்களை ஆளுநர் உரை அறிவிக்கிறது.

கிருஷ்ணா ஆற்று நீர்த் திட்டம் வெற்றியாக நிறைவேறிட வழி காணுவதும், இப்போது சென்னைக்குக் குடிநீர் தரும் இரண்டு பழைய ஏரிகளை அன்னியில் இரண்டு புதிய பெரிய ஏரிகளை 5 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிப்பதும் மட்டுமே சென்னையில் உள்ள குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க உதவ முடியும்.

இத்துடன், வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது என அரசு அறிவித்திருப்பது முடியாத - பயன்படாத ஒன்று ஆகும். தமிழ்நாட்டு ஏரிகள் 30 ஆண்டுகளாகத் தூர்வாராமல் - வாய்க்கால்களை விளங்காமல் பாழடிக்கப்பட்டது போல், வீர நாராயணன் ஏரியும் பாழடிக்கப்பட்டு விட்டது. கடந்த பத்தாண்டுகளில் - 1991 முதல் 2001 வரை, வீராணம் ஏரியைச் செப்பனிடத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகள் போதாதவை. நாம் ஏரியின் உள்வாய் உள்படச் சுற்றிப் பார்த்தே இதைச் சொல்லுகிறோம். கிள்ளை, பரங்கிப் பேட்டை வரையில் வேளாண்மைப் பாசனத்துக்கும்; கடலூர் மாவட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலும் உள்ள குடிநீர்த் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றவும் மட்டுமே வீராணம் ஏரி நீர் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கே அங்குள்ள நீர் பற்றாது.

எனவே, இதற்கு ஏற்ப வீராணம் ஏரியை மேலும் ஆழப்படுத்துவதைத் தமிழக அரசு உடனே செய்ய வேண்டும்; வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை அடியோடு கைவிட்டு விட வேண்டும்.

4. வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் பருவ கால மழைநீரைத் தேக்கி வைக்க ஏற்றவையாகத் தமிழகத்திலுள்ள சிற்றேரிகளையும், பெரிய ஏரிகளையும் தூர் வாரி, வாய்க்கால்கள் - மதகுகள்-கலங்குகளை நன்றாக விளக்கிச் சீர் செய்திடப் போர்க்கால விசையில் அரசு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். பாசன வசதிப் பெருக்கம் தான் சிறிய - குறு நில உடைமைகளைக் கொண்ட விவசாயிகளுக்கு உடனடித் தேவை.

நிலத்தடியில் நீர் சுரக்கவும், நிலம் நீர் வள்ம் பெறவும் இது உதவும்.

5. தி.மு.க ஆட்சிக் காலத்துத் திட்டமான உழவர் சந்தை - அந்தந்தப் பகுதிகளைச் சுற்றியுள்ள ஊர்களில் ஏழைகளால் பயிரிடப்படும் உள்ளூர் காய்கறி, இலை வகைகள், சுமை உந்துக் கட்டணம் இன்றிச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டு அன்றாடம்

படிப்பகம்

www.padippakam.com



விற்கப்படவும் - பயனாளிகளால் வாங்கப்படவும் பெரிய உதவியாக் விளங்கியது. இவற்றில் எடை மோசடி இல்லாமல் - மொத்தக் காய்கறி மண்டிக்காரர்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்திட வழியே இல்லாமல் - அடியாள்களோ, அரசு அதிகாரிகளோ மாமூல் பெற இடமில்லாமல் தடுத்து விட்டாலே போதும். செயல்படாத உழவர் சந்தைகளைச் செயல்பட வைப்பதையும்; எல்லாப் பெரிய ஊர்களிலும் இச் சந்தைகளைத் தொடங்கு வதையும் அரசு செய்ய் வேண்டும்.

இதற்கு மாறாக, ஏழு நாள்களுக்கு ஒரு தடவை கூடுகிற பழைய காலத்துச் சந்தைகளை விரிவுபடுத்துவதனால் - இப்போது பயனடையும் சிற்றூர்ப் புற ஏழைகள் பெரிய அளவு பயன் பெற முடியாது.

இதை அமைச்சர்களும், அதிகாரிகளும் - குறிப்பாக முதலமைச்சரும் சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

6. தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் கடந்த 30 ஆண்டுகளில் வீணாக்கப்பட்டு விட்டன. கட்சி அரசியலைக் கூட்டுறவுகளில் திணித்ததே இதற்கு முதலாவது காரணம்; நீண்ட காலம் தேர்தல் நடத்தாமல்போனதும் ஒரு பெரிய காரணம். கூட்டுறவுத் துறையில் இந்தியா முழுவதிலும் உள்ள நிலைமை இது. கட்சி அரசியலுக்கு முதன்மை த்ராமல் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதும், வேளாண் கடன்கள் காலா காலத்தில் திருப்பி வசூல் செய்யப்படவும், பருவ காலந்தோறும் புதிய வேளாண் கடன்கள் காலந்தவறாமல் தரப்படவும் அரசு வழி காண வேண்டும்.

7. பஞ்சாப், அரியானா, ஆந்திர மாநிலங்களின் அரசுகள் தரம் குறைந்த நெல் ஆனாலும் அரசு வாங்கித்தான் தீர வேண்டும் என அழுத்தமும் நெருக்கடியும் தந்து ரூ. 200 கோடி, ரூ 300 கோடி, ரூ 350 கோடி என, உரிய விலைக்கு மேல் பெற்றன.

தமிழகத்தில் உயர்வகை பொன்னி நெல் கூட, ரூ 400க்கு மேல் விலை போகவில்லை. இது பெரிய - சிறிய வேளாண்மைக்காரர் அனைவரையும் ஒன்றே போல் பாழடிப்பதாகும். கரும்புக்கு விலை உறுதி செய்யும் பொறுப்பைத் தனியார் சர்க்கரை ஆலை முதலாளிகளும், அரசும் சேர்ந்து முடிவு செய்வது அநியாயமானது. கரும்புக்கு ஒரு டன்னுக்கு விலையாக ரூ. 1000 அளிப்பது இன்றியமையாதது.

இது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

8. கைத்தறி நெசவைக் கைவிட்டு, மின் விசைத் தறிவுக்கு மாறிவிட்ட நெசவாளர்கள் - பெரிய பெரிய ஆலைகள் வெளியே தள்ளும் துணிவகைகளோடு எப்போதும் போட்டி போட முடியாது. இது தீராத சிக்கலாக இருக்க, முதலாவது காரணம் இவர்களுக்கு நூல் கிடைப்பது, சாயம் கிடைப்பதில் உள்ள சீர்கேடும்; நெய்யப்பட்ட துணிகள் வாங்கப்படவும் ஏற்றுமதி செய்யப்படவும் புதிய புதிய சந்தைகளை அயல் நாடுகளில் அரசு காணாததுமே ஆகும். மேலும் நெசவுக் கூட்டுறவுகள் குடும்பம் - சாதி - கட்சி என்கிற அடிப்படைகளில் இயங்குவதும் குலைக்கப்பட வேண்டும்.

9. ''அண்ணாவின் இரு மொழிக் கொள்கையை அரசு அப்படியே செயற்படுத்தும்'' என அரசு உறுதி கூறியுள்ளது.

இந்திய அரசின் மொழிக் கொள்கை என்பதை ஏற்றுக் கொண்டு, அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான் இந்த ''இரு மொழிக் கொள்கை.''

''இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழி என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது'' என்று சொன்ன போது, ''இந்தியை, இந்தி பேசாத மக்கள் ஏற்றுக் கொள்ளுகிற வரையில் இந்தியுடன் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக இருக்கும்'' என்பது தான் அண்ணா பெற்ற உறுதி மொழியாகும்.

அதனை ஒட்டி, இந்தி பேசாத மக்களின் மொழி ஒன்றை, இந்தி பேசும் மாநிலங்களிலும், மற்ற மாநிலங்களிலும் உயர் நிலைப் பள்ளிகளில் கற்றுத் தரவேண்டும்; அதற்கு ஏற்ப - இந்தி பேசுவோர் தாய் மொழியான இந்தி, ஆங்கிலம் அத்துடன் தமிழ் போன்ற ஏதேனும் ஒரு மொழி, ஆகிய மூன்று மொழிகளைப் பிள்ளைகள் கற்க வேண்டும் என்பதே ''மும்மொழித் திட்டம்'' ஆகும். இதை



படிப்பகம்

www.padippakam.com



எந்த இந்தி மொழி மாநிலமும் செயல்படுத்த வில்லை.

தமிழ் - ஆங்கிலம் - இந்தி ஆகிய மூன்று மொழி களையோ, தமிழ் - ஆங்கிலம் - அசாமி (அ) தெலுங்கு ஆகிய மூன் று மொழிகளையோ தமிழகப் பள்ளிகளில் கற்றுத் தர முடியாது; தமிழையும் ஆங்கிலத்தையும் மட்டுமே கற்றுத் தர வேண்டும் என்பதுதான் அண்ணாவின் இரு மொழிக் கொள்கை.

இது, ஆங்கிலம் இந்தியாவின் இணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்ளுவதுதான். இது இப்போது தோற்றுப் போய்விட்டது; இந்தியே ஆட்சி மொழி என்பது வேக வேகமாக வந்துவிட்டது. ஆங்கிலம் பயிற்று மொழியாக மட்டும் நீடிக்கும் - ஆனால் ஒரே ஆட்சி மொழியாகவோ, இணை ஆட்சி மொழியாகவோ ஒரு நாளும் வராது. இதை நாம் உணர வேண்டும்.

''அரசியல் சட்டத்தில் கண்ட 19 மொழிகளும் இந்திய மய்ய அரசின் ஆட்சி மொழிகளாக வர வேண்டும்'' என்பதும் திராவிட அரசியல் கட்சிகளின், திராவிடத் - தமிழ் இயக்கங்களின் கொள்கை. இதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்; இதற்கு, இந்தியா முழுவதிலும் சென்று ஆதரவு திரட்டி, வெளியிலும் நாடாளுமன்றத்திலும் கோடிக்கணக்கான மக்களைத் திரட்டிப் போராட வேண்டும். அதுவரையில் இது ஒரு கனவே.

இப்படிப்பட்ட சிக்கலை அப்படியே வைத்துக் கொண்டு - அரசியல் சட்டப்படி, பயிற்று மொழி பற்றி எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிற தமிழ்நாட்டு அரசு, ''தாய்மொழி வழியில் மட்டுமே கல்வி; தாய் மொழி வழியில் மட்டுமே ஆட்சி'' என்பதை இரு மொழிக் கொள்கையோடு குழப்பிக் கொண்டு, ஆங்கிலத்தை உயர்த்திப் பிடிப்பது அடாதது.

இரஷ்யா, சப்பான், செர்மனி போன்ற பல நாடுகளில் ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால் மேற்கண்ட எல்லா நாடுகளிலும், 6 ஆம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் ஒரு பாடமாக மட்டுமே கற்றுத் தரப்படுகிறது. ''அறிவுச் சாளரம் ஆங்கிலம்'' என்பதன் பொருள் அவ்வளவு தான். ஆங்கிலம் பயிற்று மொழி, ஆங்கிலம் ஆட்சி மொழி என்பதெல்லாம் உலகத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா தவிர்த்த வேறு எந்த நாட்டிலும் இல்லை.

தமிழ்நாட்டில் ஆங்கிலம் பயிற்று மொழி யாகவோ, ஆட்சி மொழியாகவோ இருப்பது திராவிட - தமிழ் இயக்கத்தின் மூலக் கொள்கை அன்று.

மேலும், எந்த சி.இராசகோபாலாச்சாரியார் இந்தியைக் கட்டாயப் பாடமாக, உயர்நிலைப் பள்ளிகளில், *1938* இல் திணித்தாரோ, அவர்தான் தமிழ்நாட்டில் தமிழையும், ஆந்திரத்தில் தெலுங்கையும் 6-ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிற்று மொழியாக, *1939* இல் அறிமுகப் படுத்தினார்.

1940 முதல் 1947 முடிய வெள்ளையர் ஆட்சியில் உயர்நிலைப் பள்ளியில் தமிழே பயிற்று மொழி; 1947க்குப் பிறகும் 1957 வரையில் காங்கிரஸ் ஆட்சியிலும் தமிழே பயிற்று மொழி.

ஆனால் எப்போதும் மெட்ரிகுலேஷனில் மட்டும் ஆங்கிலமே பயிற்று மொழி.

இந்த நிலைமை காங்கிரசு ஆட்சியில் 1962க்குப் பிறகு, மாறத் தொடங்கியது; 1967 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விசையாகவே மாறத் தொடங்கியது. 1989-91 தி.மு.க. ஆட்சி, 1991-2001 அ.தி.மு.க. - தி.மு.க. ஆட்சிகளில் படுவிசையில் மாறத் தொடங்கி விட்டது.

ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பது தேசிய காங்கிரசார், திராவிடர் இயக்கத்தார், தமிழ்ப் பெருமக்கள் ஆகிய அனைவர்க்கும் மிகப் பெரிய இழிவும் அவமானமும் ஆகும். இதுபற்றி இன்றைய அ.தி.மு.க. அரசு திறந்த மனதுடன் சிந்திக்க வேண்டும்.

''தமிழ்நாட்டில் தமிழ் மட்டுமே பயிற்று மொழி; ஆங்கிலம் ஒரு பாடம்'' என்கிற பயிற்றுமொழி நிலைபாட்டையும்; ''தமிழ் மட்டுமே தமிழ் நாட்டில் ஆட்சி மொழி'' என்கிற நிலைபாட்டையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

*10.* தமிழ்நாட்டில், *1993* இல் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது, தமிழ்நாட்டிலுள்ள *69%* இட ஒதுக்கீட்டைக் காப்பாற்றிட வேண்டி, அரசியல் சட்ட விதி 31-C யின் கீழ் ஒரு தனிச்சட்டம் தமிழகச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்டது; அச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அரசியல் சட்டவிதி 31-B யின் படி, ஒன்பதாவது அட்டவணையின் கீழ் இணைக்கப்பட்டது.

இந்த முயற்சி பயன்படாது; இந்தச் சட்டம் செல்லாது என 23-12-1993 முதலே அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை மற்றும் மா.பெ.பொ.க சார்பில் நாம் அரசுக்குச் சுட்டிக் காட்டினோம். இதைச் சீந்துவார் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



*1993, 1995* இல் தில்லியில் மாதக் கணக்கில் தங்கி நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த அ.தி.மு.க., தி.மு.க., தமிழ்நாட்டு காங்கிரசார், சி.பி.அய் தேசியக் குழுவினர் ஆகியோரிடம் இதைச் சுட்டிக் காட்டினோம். எவரும் இதற்குக் காது கொடுக்கவில்லை.

*1996* இல் முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர் மு. கருணாநிதிக்கு *1996* சூன், *1997* சூன் காலத்தில் இது பற்றித் தெளிவுபட எழுதினோம். பேச்சும் இல்லை; மூச்சும் இல்லை.

*2000* டிசம்பரில் தில்லியில் *20* நாள்கள் தங்கி, எல்லாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதுபற்றி வேண்டுகோள் வைத்தோம். எந்தப் பயனும் இல்லை.

என்ன அந்த வேண்டுகோள்?

''இந்தியாவிலுள்ள, சமுதாயத்திலும், கல்வி யிலும் பிற்படுத்தப்பட்ட குடி மக்களுக்கும்; பட்டியல் குலத்தினருக்கும் - பட்டியல் பழங்குடி யினருக்கும் மய்ய - மாநில அரசுக் கல்வி - வேலை இவற்றிலும், பதவி உயர்விலும் அந்தந்தப் பிரிவு மக்களின் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு தரப்பட வேண்டும்'' என, அரசியல் சட்ட விதிகள் 15(4), 16(4), 29(2) இவற்றைத் திருத்தி அமைக்க வேண்டும். இதுவே கோரிக்கை.

ஏன்? பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் ஆகியோர் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு பெறுவது காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக - இதே தன்மையில் தான், விதி 16(4) என்பதுடன், புதிதாக 16(4 அ), 16 (4 ஆ) என்கிற இரண்டு திருத்தங் களைத்தான் காங்கிரசு அரசும், பாரதிய சனதா அரசும் நிறைவேற்றின.

இவ்வளவு திருத்தங்கள் வந்த பிறகும், பட்டியல் குலத்தினர் - பழங்குடியினர் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு பெற இவை உதவாது என்று, *2000* தொடக்கத்திலேயே நாம் சொன்னோம்.

இதன்பிறகு, *2000* இறுதியில் விதி *335* என்பதைத் திருத்திய பிறகு, இவ்வகுப்பினர்க்கு ஓரளவு பாதுகாப்புக் கிடைத்தது. விதி *335* அடியோடு நீக்கப்பட வேண்டும் என்பது இன்றும் நம் கோரிக்கையாகும்.

எனவே அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் திரட்டி, மேலே கண்டவாறு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று, இந்திய அரசையும் நாடாளுமன்றத்தையும் கோரி, செல்வி ஜெயலலிதா தலைமையில் உள்ள தமிழக அரசினர், தமிழகச் சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

''விகிதாசார இட ஒதுக்கீடு'' என்பதே இப்படிப் பட்ட திருத்தத்தின் கரு ஆகும். இதுவே சரி ஆகும்.

இதனை நன்கு ஆய்வு செய்து - தமிழக அளவிலும், தில்லி அளவிலும் இட ஒதுக்கீட்டில் உண்மையான அக்கறையும் பற்றும் உள்ள - அ.இ.அ.தி.மு.க, தி.மு.க, பிற திராவிடக் கட்சிகள், காங்கிரஸ் (இ), பா.ம.க, த.மா.கா, சி.பி.அய், முஸ்லிம் லீக், விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் முதலானவையும் மற்றுமுள்ள கட்சிகளும் செயல்பட்டு நிறைவேற்றிட முன்வர வேண்டும்.

தமிழ்நாட்டை வளமும் எழுச்சியும் மிக்க மாநிலமாக ஆக்கிட, ஆளுநர் உரையில் உறுதி கூறியுள்ள புதிய அமைச்சரவை இவற்றைப் பற்றியெல்லாம் ஆர அமரச் சிந்தித்துச் செயல்பட முன்வர வேண்டும்.

1.6.2001 -வே. ஆனைமுத்து



பெண்களே! வீரத் தாய்மார்களாக விரும்பப்படுங்கள், நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்களும் மற்ற ஆண்களும் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள் மீது பழி சுமத்தி வருகிறார்கள். அப்பழிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள். எதிர்காலத்தில் இவன் இன்னாருடைய மனைவி என்று அழைக்கப்படாமல், இவர் இன்னாருடைய கணவன் என்று அழைக்கப்பட வேண்டும்.

- ஈ.வெ.இரா

www.padippakam.com



துணைத் தலையங்கம்

# 2001 தேர்தல் முடிவுகள்

துரை.தில்லைவனம்

தமிழ்நாட்டின் 12 ஆவது சட்டமன்றத்துக்கு 10.5.2001 அன்று தேர்தல் நடைபெற்றது. 13.5.2001 இல் வந்த தேர்தல் முடிவுகள் வழக்கமானவர்கள் வெளியிட்ட தேர்தல் கணிப்புகளை எல்லாம் பொய்யாக்கி விட்டன.

தேர்தல் முடிவுகள் பற்றிப் பல்வேறு கருத்துகள் வெளியாகி உள்ளன.



நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணியாகவும், அஇஅதிமுக தலைமையில் ஒரு கூட்டணியாகவும், மதிமுக தனித்தும் கட்சிகள் போட்டியிட்டன. அஇஅதிமுக கூட்டணிக்குப் பெரு வெற்றியையும், திமுக கூட்டணிக்குப் பெருந் தோல்வியையும் மக்கள் அளித்துள்ளனர். மதிமுக ஓரிடத்தில் கூட வெற்றிபெற முடியாவிட்டாலும், திமுக கூட்டணியின் வெற்றி வாய்ப்பை அது வெகுவாகப் பாதித்தது.

''செல்வி செயலலிதாவின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாததால் எழுந்த அனுதாப அலையே, அஇஅதிமுகவின் வெற்றிக்குக் காரணம்'' என்று திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

''இது என்னுடைய கடைசித் தேர்தல்'' என்ற திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரான கலைஞரின் கூற்றுக்கே கிடைக்காத அனுதாபம், அஇஅதிமுக தலைமையின் மேல் விழுந்தது என்பது ஏற்க இயலாததாகும்.

அதுபோலவே ஊழல் முதலிய குற்றச்சாட்டுகளும் எடுபடாமல் போனதற்குக் காரணம், திமுகவின் கீழ் மட்டமும் அதே குற்றத்துக்கு ஆளாகி நிற்கிறது என்று கூறப்படும் கருத்துகளில் பெரிய அளவில் உண்மை உள்ளது.

மேலும், கலைஞர் கருணாநிதி - மாறன் குடும்பம் ஆசியாவிலேயே நான்காவது பெரிய பணக்காரக் குடும்பம் ஆனது எவ்வாறு என்று, செயலலிதா மேடை தோறும் கேட்டு வந்தார். திமுக அதற்குப் பதிலடி கொடுக்க வக்கின்றிப் போனது ஒரு பெரிய உண்மை.

வேலை தேடும் பதிவு மூப்பு அடிப்படையில் ஏறக்குறைய 50 ஆயிரம் ஆசிரியர்கள் வேலைக்கு அமர்த்தம்; சாலைகள் செப்பம்; ஏரிகள் - கால்வாய்கள் தூர் எடுத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகளைக் கண்கூடாகக் கண்ட பிறகும், திமுகவுக்கு ஏன் இந்தப் பேரிடி?

1. அஇஅதிமுக பெரிதும் அரசியல் கட்சிகளைச் சார்ந்து பெரிய கூட்டணி அமைத்தது.

2. திமுக பெரிதும் சாதிக் கட்சிகளையே நம்பிக் களமிறங்கியது.

3. அத்துடன் பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இவற்றை விடத் - தமிழ்நாடு பாரதிய சனதாக் கட்சிக்கும், காங்கிரஸ் உதிரிகளுக்கும் தி.மு.க. மிகவும் முதன்மை தந்தது.

4. காலங்காலமாகத் திராவிட அரசியல் கட்சிகளைச் சார்ந்து நின்ற இஸ்லாமியர் - கிறித்துவர் ஆகியோர் அண்மையில், பாரதிய சனதா தலைமையிலான ஆட்சியில், இவர்களுக்குப் பல மாநிலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளைக் கண்டனம் செய்யக் கூட - தி.மு.க. கட்சியோ, தி.மு.க. அரசோ முன்வரவில்லை. 2001 தேர்தலில் இவர்கள் தி.மு.க.வுக்கு எதிரான அணியையே பெரிதும் ஆதரித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com





அதிமுக கூட்டணி

| | போட்டி | வெற்றி |
|---|---|---|
| அதிமுக | 140 | 133 |
| தமாகா | 31 | 21 |
| பாமக | 27 | 20 |
| காங்கிரஸ் | 15 | 7 |
| இந்திய கம்யூனிஸ்டு | 8 | 5 |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு | 8 | 6 |
| தேசிய லீக் | 1 | 1 |
| பார்வர்டு பிளாக் | 1 | 1 |
| தமுக (ஜான்பாண்டியன்) | 1 | - |
| குடியரசுக் கட்சி (தமிழரசன்) | 1 | 1 |
| சுயேச்சை (புவனகிரி) | 1 | 1 |
| மொத்தம் | 234 | 196 |

5. தமிழகத்தின் தென் பகுதியில் ஏற்கெனவே முக்குலத்தோரின் ஆதரவையும், மேற்குப் பகுதியில் ஏற்கெனவே கொங்கு வேளாளரின் ஆதரவையும் பெற்றிருந்த அ.இ.அ.தி.மு.க. - வட தமிழ்நாட்டில் அடர்த்தியாக உள்ள வன்னியர்களின் ஆதரவையும், பா.ம.க. மூலம் பெற்று, ஒரு வலிமையான சாதிவாக்கு வங்கி அணியை அமைத்துக் கொண்டது. இந்த வகுப்பினரைப் பின்பற்றியே - அந்தந்தப் பகுதியில் உள்ள நாடார், நத்தமர், செங்குந்தர் போன்ற மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அ.இ.அ.தி.மு.க. அணியை ஆதரித்தனர்.

செம்மையாகவே அமைந்துள்ள இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் அரசியல் கட்சிகளையும் தி.மு.க. அணி வரவேற்று இணைத்துக் கொண்டது. ஆனால், மேலே கண்டபடியான வாக்குவங்கி வலிமை அ.இ.அ.தி.மு.க. பக்கமே பெரிதாக இருந்தது; இந்த உண்மையைத் தேர்தல் பற்றிய மதிப்பீட்டாளர்கள் சரிவரக் கவனிக்கவில்லை. தி.மு.க.வும் கவனிக்கவில்லை.

6. நெல், கரும்பு இவற்றுக்குப் போதிய விலை தர தி.மு.க. அரசு முயலவில்லை என்பதும்; பங்கீட்டுக் கடைகளில் பண்டங்கள் சரிவரத் தரப்படவில்லை என்பதும், மண்ணெண்ணெய், அரிசி விலைகள் ஏற்றப்பட்டதும், பெரும்பாலான விவசாயிகளும் பெண்களும் தி.மு.க. பேரில் குறை காணப் பெரிய காரணங்களாகும்.

மேலும் பொதுவுடைமைக் கட்சியினர் திமுகவின் மதவாத - சாதி ஆதரவுப் போக்கை நல்லவண்ணம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தனர். 'பாரதிய சனதா தன் மார்பில் உள்ள கவசம் அல்ல - காயம்' என்பதைத் திமுக உணரத் தவறி விட்டது.

அஇஅதிமுகவினர், திமுக மீது 'பழிவாங்குதல், குடும்ப ஆட்சி' முதலான குறைகளைச் சுமத்தியது. மேலும், 'மக்களிடம் பணப் புழக்கம் இல்லை, உழவர்கள் முதல் தொழிலாளர்கள் வரை அனைவரும் வருவாய் இன்றி வாடுகின்றனர், சிறு தொழில்கள் நசிந்து விட்டன' என்பன போன்ற பல குறைகளைக் கூறித் தேர்தல் பரப்புரை செய்தனர்.

தி.மு.க மீது கூறப்பட்ட இத்தகைய குறைகள் தம் மீது படாமல் அஇஅதிமுக பார்த்துக் கொள்ளுமா என்பது ஒரு பெரிய கேள்விக் குறியே ஆகும்.



திமுக கூட்டணி

| | போட்டி | வெற்றி |
|---|---|---|
| திமுக | 167 | 27 |
| பாஜக | 21 | 4 |
| புதிய தமிழகம் | 10 | - |
| விடுதலைச் சிறுத்தைகள் | 8 | 1 |
| மக்கள் தமிழ்த் தேசம் | 6 | - |
| புதிய நீதிக் கட்சி | 5 | - |
| எம்ஜிஆர் அதிமுக | 3 | 2 |
| ஐக்கிய ஜமாஅத் | 3 | - |
| திமுக ஆதரவு நண்பர்கள் | 2 | 2 |
| எம்ஜிஆர் கழகம் | 2 | - |
| தமிழ்ப் பாமக | 1 | - |
| தொண்டர் காங்கிரஸ் | 1 | - |
| முத்தரையர் சங்கம் | 1 | - |
| தமிழர் பூமி | 1 | - |
| உழவர் உழைப்பாளர் கட்சி | 1 | - |
| கொங்குநாடு மக்கள் கட்சி | 1 | - |
| அஇமுமுக | 1 | - |
| மொத்தம் | 234 | 36 |

படிப்பகம்

www.padippakam.com



9. மய்ய அரசின் பொருளாதாரக் கொள்கை மாநில அரசிலும் எதிரொலிக்கின்றது.

தாராளமயமாக்கல் என்பது 80% மக்களின் நலன்களைப் புறக்கணிக்கின்றது. 'நெல்லுக்கு விலையில்லை, தேயிலைக்கு விலையில்லை, தேங்காய்க்கு விலையில்லை, நெசவுத் தொழில் நலிந்து விட்டது' என்று கிராமப்புற மக்கள் சலித்துக் கொண்டதன் விளைவாகப் பெரும்பாலான இடங்களில் ஆளும் கட்சிக்கு எதிரான தன்மையில் (anti - establishment) மக்களை வாக்களிக்கத் தூண்டியுள்ளது. இதைத் தவிர்க்க இயலாமல் தலைகுப்புறக் கவிழ்ந்தது திமுக அணி.

10. அதே சமயத்தில் கிட்டத்தட்டப் பாதிப்பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்காமல் ஒதுங்கி விட்டனர். வாக்களித்துத் தங்களின் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையைச் சிலரேனும் இழந்து வருகின்றனர் என்பது ஓர் உண்மை.

நாடு நவீன காலனியாகி வரும் நிலையில், 'சாதாரண மக்களிடம் எப்படிப் பணப் புழக்கத்தைக் கொண்டு வருவது?' என்பது வெற்றி பெற்றவர்களுக்கு விடப்பட்ட ஓர் அறைகூவல்.

அதே சமயத்தில் மக்களுக்குத் தேர்தல் மீது சலிப்பு வேகமாக வளர்ந்து வருகிறது. இடதுசாரி சக்திகள் மக்களை அரசியல்படுத்த மிகச் சரியான நேரம் இது.

நாடாளுமன்ற முறை அரசியல் கட்சிகளைப் புறங்காணும் அளவுக்கு, மக்களையும் இளந் தலைமுறையினரையும் அரசியல் படுத்துவதும், புதிய அரசியல் - பொருளாதார - சமூக விடுதலைக்குப் போராட இவர்களை முன்வரச் செய்வதுமே நம் முன் உள்ள பணிகளாகும்! ★

# சமுதாயமும் அரசியலும்

**-ஈ.வெ.இரா**

தோழர்களே!

சமுதாயம் வேறு; அரசியல் வேறு என்று கூறுவது தவறாகும். சமுதாய அமைப்பைச் சரிவர நடத்துவதுதானே அரசாங்கத்தின் கடமை ஆகும்! சமுதாய அமைப்புக்கு வழிவகை அமைப்பதே மதத்தின் தத்துவமாகும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் தங்கள் மதங்களை அவ்விதமே கையாண்டு வருகின்றனர். ஆனால், நமது மதம் இருக்கிறதே, அது நமது சமுதாய அமைப்பின் முன்னேற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருக் கிறது. நம் அரசாங்கம் என்பதோ மக்களுக்காக அல்லாமல், அரசாங்கத்தாருக்காக மக்கள் வாழவேண்டிய தலைகீழ்த் தத்துவத்தில் நாம் உழன்று வருகின்றோம்.



எனவே, நாமும் நமது நாடும் முன்னேற வேண்டுமானால், சமுதாயத் துறையிலே பெரும் மாறுதலை உண்டாக்க வேண்டுவது அவசியமாகும். அதன் பின்னரே, நல்ல ஆட்சியும் ஏற்படுத்த முடியும் என்பது திண்ணம். அவ்வாறு இல்லாது, இன்றைய சமுதாய அமைப்பைக் கொண்டே, யார் ஆட்சி செய்தாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் ஒரு சிறிதும் நீங்குவதற்கு வழி இல்லை; வழிவகையும் இருக்க முடியாது.

*(பொன்மலையில், 22.5.1949-இல் சொற்பொழிவு - 'குடிஅரசு' 28.5.1949)*

தோழர்களே!

அரசியல் என்று தனியாக ஒரு விஷயம் இல்லை; அரசியல் என்பது மக்கள் வாழ்வில் சுமத்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சேர்த்துக் கூறுவதுதான் அரசியல். அதாவது, சமுதாயம், பொருளாதாரம், கல்வி, வியாபாரம், கைத்தொழில், பகுத்தறிவு இன்னும் மற்றும் அனேக காரியங்களைக் கொண்டதுதான் அரசியல். ஆனால், இன்றைய தினம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அரசியல் என்பது வேறு, சமுதாயம் வேறு என நினைத்துக் கொண்டு, தனித் தனியாகப் பிரித்துப் பேசுகிறார்கள்.

ஆகவே, சமுதாயம் வேறு, அரசியல் வேறு என்று நினைத்துக் கொண்டு பிரிப்பதின் காரணம் என்ன? அதாவது, அரசியல் விஷயமாகப் பேசுவதாய் இருந்தால் அது 'பொலிடிக்கல்' என்றும், சமுதாய விஷயமாக இருந்தால் அது 'சோஷியல்' என்றும் பிரித்து மக்களுடைய சமுதாயத்துறை சீர்படுவதற்கு இல்லாமல் செய்வதற்காகவே செய்த ஒரு தந்திரம் இது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாட்டிலேதான் இப்படிச் சொல்லுகிறோமே தவிர, வேறு எந்த நாட்டிலும் இப்படித் தனியாகப் பிரித்துக் கையாளுவது கிடையாது.

ஏன் அப்படி அமைந்தது என்றால், இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பு பெரும்பாலும் ஒரு சிறிய கூட்டத்தாருடைய பிழைப்புக்காகவே அமைக்கப்பட்டு விட்டது. ஆகவே, சமுதாயத் துறையில் ஏதாவது மாறுதல் பண்ண வேண்டுமெனக் கருதினால் கூட, அதனால் பிழைக்கிற கூட்டத்தார், 'இது தவறு, இதைத் தவிர வேறு ஏதாவது பேசு' என்று சொல்லித் தடுத்துக் கொண்டே வருகிறார்கள். அப்படி . வந்ததாலேதான் இந் நாட்டில் வெள்ளைக்காரருடைய ஆட்சி ஏற்பட்டும் - அவர்கள் அரசியல் துறையில் சரியாக நடந்து வந்தும் - சமுதாயத் துறையில் கைவைப்பதற்குத் துணியவில்லை. அப்படியே துணிந்தாலும் அன்றைய தினம் பெரிய எதிர்ப்பு இருந்துதான் வந்தது. வெள்ளைக்காரனுடைய ஆட்சியிலேயே ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டபோது, 'நாங்கள் அரசியல் துறையில் மாத்திரம் பிரவேசிக்கிறோமே தவிர, சமுதாயத் துறையில் எவ்விதமாகவும் பிரவேசிக்கவில்லை' என்று சொன்னார்கள். அதைத்தான் இப்போது, 'பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி' என்று சொல்லிக் கொள்வது. ஏதாவது ஒரு வார்த்தை பேச வந்தால், அதைப் பற்றி உடனடியாக 'சர்க்கார் சமுதாயத் துறையில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறது. ஆகையால், ஒருவரும் சமுதாயத் துறையில் பிரவேசிக்கக் கூடாது' என்று சொல்லி விட்டார்கள். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் அதை வெவ்வேறாகப் பிரிப்பது இல்லை.

எங்களுடைய முக்கியமான சங்கதிகளெல்லாம் சமுதாயத்தைப் பற்றிய சங்கதிதான். இதற்காக நீண்ட நாட்களாக நாங்கள் பாடுபட்டு வருகிறோம். இந்த 25 ஆண்டுகளாக நாங்கள் செய்த வேலைகள் எல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படும் முறையில்தான் செய்து வருகிறோம். எங்களுடைய கொள்கைகள் எல்லாம் சமுதாயச் சம்பந்தமாகவேதான் இருக்கும்.

*(பாண்டமங்கலத்தில், 10.10.1951இல் சொற்பொழிவு - 'விடுதலை' 14.10.1951)*

*(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்', பக்.809 - 810)*

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக தொழிலாளர்களின் மே நாள் சூளுரை

வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசின் 2001 - 2002 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் 1000 தொழிலாளர்களுக்குக் குறைவாக உள்ள தொழிற்சாலைகளை அரசின் முன் அனுமதியின்றித் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மூடி விடவும், தம் விருப்பம் போல் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கவும் முதலாளிகளுக்கு அதிகாரம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காகத் தொழில் தகராறுகள் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் ஆகியவற்றை வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் திருத்திட வாஜ்பாய் அரசு திட்டமிட்டுள்ளது. இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் 80 விழுக்காடு தொழிற்சாலைகளில் தலா 1000 தொழிலாளர் களுக்குக் குறைவாகப் பணிபுரிகின்றனர். முன்பு 100 தொழிலாளர்களுக்குள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டும் இந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

மத்தியில் பாரதிய சனதா கட்சியின் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு இந்தியா முழுவதும் நூற்றுக்கணக்கான நூற்பாலைகளும், நெசவாலை களும், பிற வகைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு விட்டன. நல்ல இலாபத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களையும் வாஜ்பாய் அரசு தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்து வருகிறது. இதனால் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தனர். 'தேச பக்தி' பற்றி வாய்க்கிழியப் பேசி வந்த பா.ச.க. ஆட்சி இராணுவத் துறையிலும் போர்த் தளவாடங்கள் தயாரிப்பில் 26 விழுக்காடு அளவிற்குப் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனம் போட அனுமதித்து விட்டது. வாஜ்பாய் அரசில் தொழிலாளர் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளைப்.பா.ச.க.வின் தொழிலாளர் பிரிவான பாரதிய மஸ்தூர் சங்கம் மிகக் கடுமையாக எதிர்க்கிறது. பாரதிய மஸ்தூர் சங்கம் உட்பட இந்தியாவில் உள்ள பிற தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றுகூடி வாஜ்பாய் அரசின் தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்து மே மாதம் தீர்மானம் இயற்றின. வாஜ்பாய் அரசு தன்னுடைய தொழிலாளர் நல விரோதப் போக்கைக் கைவிடா விட்டால் சூலை மாதம் 3ஆம் தேதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதாக எச்சரித்துள்ளன.

மே முதல் நாள் உலகம் முழுவதும் தொழிலாளர் எழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 21 ஆம் நூற்றாண்டின் முதல் மே நாள் உலகம் முழுவதும் வழக்கத்தை விட மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் உள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றுகூடி வாஜ்பாய் அரசின் தொழிலாளர் நலனுக்கு எதிரான போக்கிற்குக் கடுங் கண்டனமும் எச்சரிக்கையும் தெரிவித்துள்ளன. இதே போன்று உலகத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு (World Federation of Trade Unions - WFTU) தன்னுடைய மே நாள் அறிக்கையில் புதிய பொருளாதாரக் கொள்கை களாலும் பன்னாட்டு நிறுவனங்களாலும் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கேடுகளைச் சுட்டிக்காட்டி, உலகத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு போராட முன் வர வேண்டுமென்று அறைகூவல் விடுத்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அந்த அறிக்கையின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

21ஆம் நூற்றாண்டின் முதல் மே நாளில் உலகத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, உலகத் தொழிலாளர் சமூகத்தின் சார்பில் உலகெங்கும் உழைக்கும் வர்க்கமாகவுள்ள பெண்களுக்கும், ஆண்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் தோழமை மிகுந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. மனித சமூகத்தின் அமைதிக்காகவும், நீதிக்காகவும், தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகவும், வாழ்க்கைத் தேவைகளுக்காகவும், நல்வாழ்விற் காகவும், தொழிலாளர்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளும், போராட்டங்களும் வெற்றி பெற வேண்டும் என்ற வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையால் தொழிலாளர் களுக்கு ஏற்பட்டு வரும் கேடுகளை எதிர்த்து உலகம் முழுவதும் தொழிற்சங்கங்கள் தீரமுடன் போராடி வருகின்றன. புதிய பொருளாதாரக் கொள்கையின் கொடிய தாக்குதல்களையும் உலக அளவில் பொருளாதார நிலையிலும் சமூக வாழ்விலும் ஏற்பட்டு வரும் சீர்கேடுகளையும் இப்புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் உழைக்கும் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். ஊகித்தறிய முடியாத சூதாட்டப் போக்கினால் பங்குச் சந்தைகள் ஆட்டங்கண்டு படு பாதாளத்தில் வீழ்ந்து விட்டன. ஏகபோகப் பெரும் வணிக நிறுவனங்கள் உலக அளவில் தங்கள் இலாப வேட்டைக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமலிருக்க,

படிப்பகம்

www.padippakam.com



தொழிற்சாலைகளை மூடி வருகின்றன. பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைகளைப் பறித்து வருகின்றன. கடந்த நூற்றாண்டில் தொழிற் சங்கங்களின் போராட்டங்களினால் தொழிலாளர்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளை ஒழித்துக் கட்டுவதில் பன்னாட்டு ஏகாதிபத்திய சக்திகள் முனைந்துள்ளன.

உலகின் பல பகுதிகளிலும் தொழிற் சங்கங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர். தொழிற் சங்கப் பொறுப்பாளர்கள் கடத்தப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் தறி கெட்டு, சிக்குண்டு கிடக்கின்ற பொருளாதார நிலையிலிருந்து மீள்வதற்காக உழைக்கும் மக்களை மேலும் சுரண்டவும், அரசின் வரவு - செலவுத் திட்டத்தி லிருந்து அதிகமான நிதியைப் பெறவும் முயன்று வருகின்றன். இதனால் மக்கள் நலத் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கும் நிதி சுருங்கி வருகின்றது. இராணுவத்திற்கான செலவு அதிகரித்து வருகிறது. இதன் மூலம் இராணுவத் தளவாட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொள்ளை இலாபம் கிடைக்கும். அமெரிக்காவில் புஷ் குடியரசுத் தலைவரான பிறகு, இராணுவத்தில் ஏவுகணைப் பிரிவுக்கு மட்டும் 11 கோடி டாலர் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது அணு ஆயுதப் போட்டியை மேலும் முடுக்கி விடும். இதனால் தற்போதுள்ள ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் மீறப்படும். உலக அளவில் 1,00,000 கோடி டாலர் ஆயுத உற்பத்திக்குச் செலவிடப்படும். அதே சமயம் (1997இல் சப்பான் நாட்டில்) கியோடோ நகரில் நடைபெற்ற உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமெரிக்கா தகர்த்திட முயன்று வருகிறது. இது உலக உயிரினங்களுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக அமையும்.

அமெரிக்காவின் தலைமையில் இயங்கும் நேட்டோ (NATO) நாடுகள் வழக்கம் போல் இரட்டை வேடம் பூண்டுள்ளன. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற கோட்பாட்டை நேட்டோ நாடுகள் கடைப்பிடிப்பதால் அய்க்கிய நாடுகள் அவையின் செயல்பாடு செல்லாக் காசு போல் ஆகிவிடுகிறது. அய்க்கிய நாடுகள் அவையின் கோட்பாடுகள் மீறப்படுகின்றன. இசுரேல் கைப்பற்றியுள்ள பகுதிகளில் வாழும் அராபியர்கள் மீது ஏவப்படும் மனித உரிமை மீறல் தாக்குதல்களும், நடத்தப்படும் படுகொலைகளும் அய்க்கிய நாடுகள் அவையின் கையாலாகாத் தனத்திற்கு எடுத்துக்காட்டாகும். **பாலஸ்தீனப் பகுதிகளிலிருந்து இசுரேல் இராணுவம் திரும்பி அழைக்கப்பட வேண்டும் என்கிற அய்க்கிய நாடுகள் அவையின் தீர்மானத்தை இசுரேல் செயல்படுத்த மறுத்து வருகிறது. மாறாக பாலஸ்தீன மக்கள் மீது தொடர்ந்து கொடுந் தாக்குதல்களை நடத்தி வருகிறது.** அதிகரித்து வரும்இசுரேலின் பயங்கரவாதக் கொடுஞ் செயல்கள் உழைக்கும் மக்களையும், உலக சமுதாயத்தையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளன. ஆதிக்கச் சக்திகளின் - அவர்களின் அடிவருடிகளின் அடாவடித்தனமான வல்லாண்மைக் கோட்பாடுகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை உலகம் முழுவதும் நடைபெற்று வரும் மக்கள் போராட்டங்கள் புலப்படுத்துகின்றன.

உலக நாடுகள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் ஆவணத்தின் மீதான தங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்துள்ள போதிலும் பெரும் பணக்கார நாடான அமெரிக்கா உட்படப் பல நாடுகள், உலகத் தொழிலாளர் அமைப்பு, தொழிலாளர்கள் சங்கமாக ஒன்று திரண்டு தம் கோரிக்கைகளுக்காகப் போராடுவது குறித்து நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை ஏற்க மறுத்து வருகின்றன. வளர்ந்த நாடுகளிலும் மற்ற நாடுகளிலும் உள்ள பெரும்பாலான தொழிலாளர்களுக்குக் - குறிப்பாகத் தனியார் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைத்து, அதன் மூலம் தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. பன்னாட்டு நிறுவனங்களும் இவற்றின் தாயகமாக விளங்கும் நாடுகளும் உலகத் தொழிலாளர் அமைப்பு (ILO) உருவாக்கியுள்ள தொழிலாளர்களுக்கான விதிகளை மதிப்பதில்லை.

அரசுத் துறை நிறுவனங்களை ஒழித்துக் கட்டுவது, தனியார் மயத்தை ஊக்குவிப்பது போன்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளால் பல நாடுகளின் தேசியப் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது. வளரும் நாடுகளின் நிதி ஆதாரங்கள் வெளியேறுவதற்கு மூல காரணமாக உள்ள பன்னாட்டு நிதியமும் உலக வங்கியும் புதிய பொருளாதாரக் கொள்கையின் கோட்பாட்டைத் தீர்மானிக்கின்றன. நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டிய பெருந்தொகை அயல்நாட்டுக் கடனுக்கான வட்டி என்ற பெயரால் கொள்ளையடிக்கப்படுகிறது. பன்னாட்டு நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் வல்லாண்மைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்று உலக மக்கள் கருதுகிறார்கள்.

கியூபா, லிபியா, ஈராக் போன்ற பல நாடுகளின் மீது ஏகாதிபத்திய நாடுகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள், ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகள் ஆகியவற்றின் விளைவாக இந்நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி விட்டனர். மனித உரிமைகளை இழந்து வாடுகின்றனர். ஏகாதிபத்திய நாடுகள் மற்ற நாடுகளின் உரிமைகளில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது, ‘நாங்கள் உலக சமாதானப் பாதுகாவலர்கள்’ என்ற முறையில் எமக்குள்ள உரிமை என்று கூறிக் கொள்வதை உலக மக்கள் கண்டிக்கின்றனர். அண்மையில் சீனா மீது விமானத்தில் பறந்து அமெரிக்கா வேவு பார்த்தது போல் மற்ற நாடுகளில் உளவறிவதும் தமக்குள்ள உரிமை என்று ஏகாதிபத்திய நாடுகள் கூறிக் கொள்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அறிவமைதி வாய்ந்த பொருளாதார, சமூகக் கோட்பாடுகள் மூலம் மனித சமூகம் வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைய வேண்டும் என்பதையே உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர் சங்கங்கள் கொள்கையாகக் கொண்டுள்ளன. இக்குறிக்கோளை நோக்கமாகக் கொண்ட பல ஒப்பந்தங்களும், திட்டங்களும் அய்க்க நாடுகள் அவையின் மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1995இல் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற சமுதாய வளர்சிக்கான உச்சி மாநாடு அனைவர்க்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று உறுதி பூண்டது. 1990களில் பெண்ணுரிமை, உறைவிட உரிமை, உணவுக்கான உத்தரவாதம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, மனித உரிமைகள் முதலானவை குறித்து உலக அளவில் பல மாநாடுகள் நடைபெற்றன.

2000 மார்ச்சு மாதம் தில்லியில் நடைபெற்ற உலகத் தொழிற்சங்கப் பேராயத்தின் 140ஆவது மாநாட்டில் சுட்டிக் காட்டியவாறு, தொழிற்சங்கங்களும், உலக மக்களின் கருத்தாக்கங்களும், இராணுவத்திற்கான செலவுகளும் ஆயுதங்களும் குறைக்கப்பட்டு, இதனால் கிடைக்கும் தொகையை வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கோரி வருகின்றன. இதேபோன்று பன்னாட்டு மூலதனங்களின் நடமாட்டத்தின் மீது வரி விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இவ்வரித் தொகையைப் பொருளாதார சமூக வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். குறிப்பாக வேலையின்மை, வறுமை, நோய் போன்றவற்றை அகற்ற இது உதவும்.

உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் மக்களும் தொழிற்சங்கங்களும் தம்மிடம் உள்ள சக்தி அனைத்தையும் திரட்டி வலிமையாகச் செயல்பட வேண்டும். தொழிற்சங்க அமைப்பில் உள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவை உடனே ஈடு செய்ய வேண்டும். பொருளாதார மறு சீரமைப்பு என்ற பெயரால் தொழிற்சங்கங்களை ஒடுக்குவதற்காக எதிரிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் துணிவுடன் எதிர்கொண்டு செயல்பட வேண்டியது இப்புதிய நூற்றாண்டில் நம்முன் உள்ள சவாலாகும்.

இவ்வாண்டின் மே நாளில் தொழிற்சங்கங்களின் செயல்பாடுகள் புத்துணர்ச்சி பெற்று வீறு கொண்டெழ வேண்டும். தொழிலாளர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பது, அமைப்பு சாரா நிலையில் உள்ள உழைப்பாளிகளிடையே சங்கத்தை உருவாக்குவது, தொழிற்சங்கங்களுக்கிடையேயும், உழைப்பாளர் களுக்கிடையேயும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது; தொழிற்சங்கங்களின் அனைத்து மட்டங்களிலும் செயலூக்கத்தை உருவாக்குவது போன்ற நடவடிக்கை களில் ஈடுபட வேண்டும். மே 1 முதல் 7 வரை 'செயல் வாரமாக' உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று உலகத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைமைக் குழு வேண்டுகோள் விடுக்கின்றது. புதிய பொருளாதாரக் கொள்கையையும், தனியார் மயமாக்கலையும் எதிர்ப்பது, அனைவர்க்கும் வேலை; வேலைக்கான உத்தரவாதம், நாடுகளின் - மக்களின் பொருளாதாரப் பாதுகாப்பு, பன்னாட்டு நிறுவனங்களின் தொழில்கள், நிதிகள் மீது தேச அரசுகள் மூலமும் உலக நாடுகளின் அமைப்புகளின் மூலமும் கட்டுப்பாடுகளை விதிப்பது முதலான கொள்கைகளுக்கு மேலும் உரம் சேர்க்கும் வகையில் 'ஒரு வார செயல்பாடு' நிகழ்ச்சிகளின் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

தொழிற்சங்கப் போராட்டங்களை வலிமை பெறச் செய்வதற்கான வழிவகைகளைக் கண்டறியுமாறு உலகத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, பன்னாட்டு - பிராந்திய - தேசிய தொழிற்சங்கங் களைக் கேட்டுக் கொள்கிறது. உலக அளவில் உள்ள உழைக்கும் மக்கள் அனைவரின் நலன்களும், அடிப்படை உரிமைகளும் நிலைநாட்டப்படுவதற்காகத் தொழிற்சங்கங்களுக் கிடையே எல்லா மட்டங்களிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதுடன், உலகளாவிய அளவில் தொழிற் சங்கங்களின் முன்னணியை அமைக்க வேண்டும்.

மே நாள் எழுச்சிக் கொண்டாட்டத்தின் மரபு என்பது தொழிலாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கவும், தொழிற்சங்கங்களின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டவும், உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை உணர்த்திடவும் நடத்தப்பட்ட போர்க் குணம் மிக்க வீரஞ்செறிந்த போராட்டங்களின் வரலாறாக விளங்குகிறது. தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்கவும், சமூக முன்னேற்றத்திற்குத் தம் பங்களிப்பை ஆற்றவும், உலகில் உள்ள தொழிற்சங்கங்கள் முன்னை விட புதிய எழுச்சியுடன் தீர்மான கரமாகவும் திட சிந்தனையுடனும் ஒற்றுமை யுடனும் செயலாற்ற வேண்டும். கடந்த நூற்றாண்டில் பனிப் போர் (Cold war) காரணமாகத் தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட பிணக்குகள் பிரிவினைகள் முதலியன மீண்டும் தலையெடுக்க வொட்டாமல் தடுப்பதற்கு இது ஒன்றே வழியாகும்.

இழிவுபடுத்தப்படாத வேலைகளும், உடலுக்கு ஊறு விளைவிக்காத பணியிடச் சூழலும், சமூகப் பாதுகாப்பும் அனைவர்க்கும் கிடைத்திடவும், போரும், இராணுவ வெறியும் ஒழிந்து மனித சமுதாயம் அமைதியும், நல்ல பாதுகாப்பும் பெற்றிடவும், உழைக்கும் மக்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் உத்தரவாதம் அளித்திடவும் நடத்தப்படுகின்ற போராட்டங்களில் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை நிலை நாட்டும் வகையில் உலகம் முழுவதும் உள்ள தொழிற்சங்கங்கள் ஈடுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்று உலகத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

*(நன்றி: Mainstream மே 5, 2001*
**தமிழில்: க. முகிலன்)**

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின்
ரத்தடி மன்றத்தில்
இந்த மாத அரசியல்
**3**

# கருணாநிதி ஆட்சிக்கு சிரார்த்தம்!

**ஓலைப்பட்டி கந்தையா**

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

வெங்கடேசய்யர் அவிழ்ந்த பஞ்சகச்சத்தையும் ஸ்வீட் பொட்டலத்தையும் ஒரு கையில் பிடித்தபடி இன்னொரு கையை உயர்த்திக் கத்திக் கொண்டே ஓடி வருகிறார்: ''வெற்றி வெற்றி பிராமண சங்கத்துக்கு வெற்றி. இந்தாரும் ஸ்வீட்! இந்தா மன்னார் சாமி.''



**மருதமுத்து:** அய்யரே உமக்கு எதாச்சும் புத்தி பேதலிச்சு போச்சா? பிராமண சங்கம் தேர்தலிலேயே நிக்கலியே!

**மன்னார்சாமி:** அதானே! காலையிலே ஒன்னும் ஆகாரம் இல்லை. எதுக்கும் இன்னொரு இனிப்பு குடுத்துடுங்க சாமி.


**வெங்கடேசய்யர்:** என்னாத்தை சொல்லி எழுதி உரைத்தாலும் - கந்தனுக்குப் புத்தி கவுட்டிக்குள் ளேன்னு இருக்கீறே மருதமுத்து - சொன்னேனா இல்லையா, பிராமணன் விவசாயம் செய்ய மாட்டான். ஆனால் நெய் - பாலோடு ராஜ விருந்து சாப்பிடுவான். பிராமணனுக்கு நெசவு தெரியாது. ஆனா பட்டு - பீதாம்பர எட்டு முழ பஞ்சகச்சம் - பதினெட்டு முழ மடிசார் கட்டுவான். அதே மாதிரி பிராமண சங்கம் தேர்தலில் நிக்காமலே - எம்.எல்.ஏ - மந்திரிகள் அனுபவிக்கிற சுகத்தைவிட அதிகம் அனுபவிக்க முடியும்.

**மன்னார்சாமி:** செயிக்கிற கட்சி உங்க கட்சிங்கறீங்க. ஞாயந்தானே!

**மருதமுத்து:** அதச் சொல்றீரா? தெரிஞ்ச சங்கதிதானே! என்னா ஓய், இப்படி கருணாநிதி அடியோட கவுந்து பொயிட்டார்?

**வெங்கடேசய்யர்:** ஜெயலலிதாவை - ஆணவம், ஆணவம்கிறரர் - கருணாநிதி. ஆனால் உலகத் திலேயே மிக வஞ்சகமான ஆணவக்காரர் கருணாநிதி தான். ராமதாசை போக விட்டது- வைகோவை அவமானப்படுத்தி விரட்டியது - பொற்கால ஆட்சி என்று இவரே இவரை சொல்லிக்கிட்டது - மதுரை அழகிரி சில தொகுதி, முல்லை வேந்தன் சில தொகுதி என்று ஆளாளுக்குக் கருணாநிதியை ஏறி மிதிச்சிருக்காங்க.

**வந்தவர்:** சிமெண்ட் விலை இதோ சித்தூர்லே ரூ.120, பெங்களூர்லே 120. - தமிழன் மட்டும் ரூ.200 அழணும். ரூ.200 கோடிக்கு மேம்பாலம் - ரூ.50 கோடி கமிஷன் - சிங்கப்பூர்லேயே வாங்கிக் கிட்டாங்களாம். பாப்பாரக் கும்பலுக்கு டைடல் பார்க். மல்டி நேஷனல் கொள்ளை யடிக்க - ஃபோர்டு, ஹுண்டாய், பணக்காரன் நிக்காம கார் ஓட்ட மேம் பாலம். நெச வாளி சாவுறான். விவசாயி அழுவு றான். பின் ஏன் மிதிக்காம தடவிக்



www.padippakam.com





கொடுப்பாங்களா?

மன்னார்சாமி: (செருப்பைப் படார் என்று தரையில் அடித்து) அப்பிடிப் போடு, அருவாளை! செருப்பு நல்லாதானே இருக்கு. என்னா செய்யணும் தம்பி!

வந்தவர்: ஒன்னுமில்லீங்க. அன்னிக்கு செருப்பு தச்ச கூலி மீதி ரூ.5 தரணும். அம்மா கட்சியில தேர்தலுக்கு, வேன் ஓட்டுனதிலே நல்ல காசு. இந்தாங்க. (செருப்பு தச்ச கடனுக்குக் கூட கருணாநிதிதான் காரணமான்னு முணகுகிறார் மருதமுத்து)

மன்னார்சாமி: என்னா அய்யரே, சத்தமில்லாம ஆயிட்டீங்க.

வெங்கடேசய்யர்: ஆசாமி அதிமுகன்னு தெரிஞ்சப்புறம் வாயத்தொறக்காலமா? லங்கணம் பரம அவுஷதம்; மௌனம் பரம சாமர்த்தியம்.

மருத்துமுத்து: யானை கீழே விழுந்தா தவளை கூட ஒரு உதை விடுமாம். எல்லாரும் கருணாநிதியை மட்டும் திட்டுங்கய்யா.

வெங்கடேசய்யர்: உம்ம காங்கிரஸ்தான் கேரளாவில் தூள் கிளப்பிட்டானே, உமக்கு ஏன்யா எரிச்சல்? பாண்டியில் வெற்றி. அசாமில் வெற்றி, வங்காளத்தில் ஏறுமுகம், யோகம் பிச்சிண்டு அடிக்கறச்சே, ஏன் கோபப்படறீர்?

மருதமுத்து: இல்லேன்னா உம்ம மாதிரி பிஜேபி விழுந்து விழுந்து மண்ணைக் கவ்வும்போது நான் பிராமண சங்கம் - நான் விசுவ இந்து பரிஷத்துன்னு வேறு ஒரு பொட்டான்லே தப்பிச்சக்கணுமாக்கும். கேரளாவில் 122 தொகுதியில் பிஜேபி டிபாசிட் இழப்பாம். அவமானம் இல்லியா?

வந்தவர்: அது என்னங்க பெரிய விஷயம்? தமிழ்நாட்டில் பிஜேபி - இப்ப நாலு எண்ணிக்கை- வளர்ச்சிதானே.

மன்னார்சாமி: (செருப்பை தரையில் அடித்து) ஒத்துக்க மாட்டீங்களே, கீழே விழுந்ததை மட்டும்! தலித் ஏழில்மலை கிட்டே - அதுவும் ஒரு பொதுத் தொகுதியிலே, திருச்சியில் அடிவாங்கியது; மேற்கு வங்காளத்தில் அடிவாங்கியது - திமுகவோடு சேர்ந்து கூண்டோடு கைலாசம் போனது பிஜேபி இல்லையா?


வெங்கடேசய்யர்: டிபாசிட் இழப்பில் மான அவமானம் பார்க்கலாமா? தமிழ்நாட்டில் மவுனப் புரட்சி நடக்குதுன்னு கூட்டத்துக் கூட்டம் பேசின வைகோ கூடத் தான் 213 தொகுதியில் போட்டி போட்டு - 205 தொகுதியில் டிபாசிட் காலி.

மருதமுத்து: அதைவிட பெரிய ஜோக்கு ஏப்ரல் 14ம் தேதி அரசியலிலிருந்து விலகுகிறேன் என்ற முரசொலி மாறன் - மே 2ம் தேதி - தமிழகத்தில் திமுக அலை வீசுதுன்னு பேசினதுதான். இப்ப அலையா- கொலையான்னு அவருக்கேத் தெரிஞ்சிருக்கும்.

வெங்கடேசய்யர்: அட உடும் அய்யா, பிஜேபி - வெங்கையா நாயுடு கூட தான் 'தேர்தலில் நிக்காம முதல்வராவுறது திருமணம் இல்லாம பிள்ளை பெறுகிற மாதிரி' என்றார்.

வந்தவர்: இந்த வெங்கையா நாயுடு ஒரு மூளை கெட்ட 'குல்டி'. உலகம் பூரா இப்ப திருமணம் இல்லாமத்தான் குழந்தை பெத்துண்டிருக்கா.

மன்னார்சாமி: அதுக்கு 'குல்டி'ன்னு என்னை எதுக்குய்யா வம்புக்கு இழுக்கிறே. வந்தமா செருப்பை தச்சிங்கினமான்னு போ. (செருப்பை தரையில் அடித்து) குல்டியாம் - அர்ரவாடு - குர்ரவாடு. (தமிழ்ப்பயல் - குறப்பயல்)



வெங்கடேசய்யர்: கோபப்படாதே மன்னார்சாமி, கருணாநிதி கூடத்தான் செயலலிதாவை 'கொழுப் பெடுத்து அலைகிறார்'ன்னார். ப.சிதம்பரம் - ஜெ. திருந்தவில்லை, திருந்தவும் மாட்டார்ன்னார், அதிமுக அணியா - பிணியான்னு சிதம்பரம் கிண்டலடித்தார். எம்.ஜி. ஆருக்கு துரோக மிழைத்தவர் ஜெயலலிதா என்றார்

படிப்பகம்

www.padippakam.com



கருணாநிதி.

**மருதமுத்து:** தேர்தல் சமயத்துப் பேச்சு ஒரு பேச்சா? சாதிக் கூட்டணி அல்ல - சாதிக்கும் கூட்டணி என்றார் கருணாநிதி. அதே செய்தியைப் போட்ட தினமணி - சாதிங்கற மாட்டை வண்டியில் உட்கார வச்சு - மாடா நின்னு கருணாநிதி இழுக்கிற மாதிரி கார்டூன் போட்டிச்சி.

**மன்னார்சாமி:** ஆண்டுக்கு ஒரு லட்சம் பதவின்னு தேர்தல் அறிக்கையில் சொல்றார் கருணாநிதி - ஆனா 11000 தாழ்த்தப்பட்டவர் பதவித் தேக்கத்தை சரி செய்ய அஞ்சு வருஷம் வேணுமின்னு வெள்ளை அறிக்கை கொடுத்தவர் இவர்தாங்கோ.

**வெங்கடேசய்யர்:** தூண்டில் காரனுக்கு தக்கை மேலே கண்ணு. உனக்கு தலித் விஷயம் மட்டும்தான். அதான் அம்மா மூணு அமைச்சர் பதவி தலித்துகளுக்கு குடுத்துட்டாங்களய்யா?

**மருதமுத்து:** ஏமாந்தவர் ராமதாஸ்தான். கருணாநிதி ஆட்சியில் மூணாக இருந்த வன்னிய அமைச்சர்கள் இப்ப இரண்டாகச் சுருங்கி விட்டார்கள்.

**மன்னார்சாமி:** ஏன் அய்யரே - தலித்துக்கு மூணு மந்திரிங்கிறீங்களே - முக்குலத்தோருக்கு 4 மந்திரியும், கொங்கு வேளாளருக்கு மூணு மந்திரியும் குடுத்திருக்காங்கல்ல?

**மருதமுத்து:** அதுகூட ஆச்சரியம் இல்லய்யா! ஒக்காலிகாவுக்கும் நாயுடுவுக்கும் கூட மந்திரி பதவி கொடுத்து - தமிழ்நாட்டை தெலுங்கு கன்னட கும்பலுக்குப் பங்குப் போட்டிருக்கார்.

**வெங்கடேசய்யர்:** ஓய், ஒசூர் எம்.எல்.ஏ. - கோபிநாத்ங்கறவர் - நான் தெலுங்கில்தான் பதவிப் பிரமாணம் எடுப்பேன்- தெலுங்கு மக்கள்தான் எனக்கு ஓட்டுப் போட்டாங்க -ங்கறார்.

**மன்னார்சாமி:** *(செருப்பை தரையில் அடித்து)* அதானே பாத்தேன்! மா ஊரு, மா பாஷா, தெலுகு சுயமரியாதா - எப்பிடி சார் போவும்?

**மருதமுத்து:** இனிமே உங்கள் காட்டிலதான்யா மழை. தீவிரவாதத்தை ஒடுக்குவேன்ங்கிறார் செயலலிதா. தமிழ் தீவிரவாதம்னு பாப்பார பத்திரிகை எல்லாம் அடி எடுத்துக் குடுக்குது. தமிழுக்குக் கருணாநிதி காலத்திலேயே விடிவு இல்லை. செயலலிதா ஆட்சியில் தமிழ் ஆர்வலர்கள் ஒடுக்கப்படுவார்கள் ங்கறதுதான் நிகர நிலவரம்.

**வெங்கடேசய்யர்:** ஏன்யா டாக்டர் ராமதாஸ் கல்லு மாதிரி உட்கார்ந்திருக்கப்ப அப்படி ஆயிடுமா?

**மன்னார்சாமி:** அது கல்லுதாங்க. 70 சதவீதம் வன்னியர்ன்னு சொன்ன பாண்டிச்சேரியிலேயே ஊத்திக்கிட்டாங்கல்ல?

**வந்தவர்:** எங்கய்யா ஊத்திக்கிட்டாங்க? 4 எம்.பி. - 20 எம்.எல்.ஏ. கட்சி அபார வளர்ச்சின்னு தைலாவரம் தோட்டத்லே அய்யா பேசினது உனக்குத் தெரியுமா?

**மருதமுத்து:** பேசிக்கிட்டே இருக்கலாம். அதான் தமிழ் நாட்டு அரசியல். 70% விவசாயிகள் - அவர்களுக்கு ஒன்னுமில்லே. 480 விவசாயிகள் தற்கொலையாம் - மத்திய அமைச்சரே சொல்றாரு. நெசவாளிகளுக்குப் பிழைப்பு இல்லை. ஆரம்பக் கல்வி பத்தி ஒரு அரசும் கவலைப்படல. வங்காளத்திலே பாருங்க 25 வருஷமா ஆட்சியை அசைக்க முடியல - நில உச்சவரம்பு சீர்திருத்தந்தான் காரணம். அங்கே கூட ஆரம்பக் கல்வி பத்தி மேல்சாதி கம்யூனிஸ்டு அரசு கவலப்படல.

**வெங்கடேசய்யர்:** ஆரம்பக்கல்வி - உயர் மட்டக் கல்வி பத்தி பிஜேபிதான் உண்மையான கவலைப்படுது. பத்தாம் வகுப்பு வரை பரீட்சை இல்லை. ஒரே மாதிரி மதவாத அடிப்படைக் கல்வி, மேல்படிப்பில் கிளி சோசியம் - எலிசோசியம். எப்பிடி சாதனை?

**மருதமுத்து:** அஹஹா! பிரமாதம்! மேல்படிப்புப் பட்டமளிப்பு விழாவில் ஆளுக்கு ஒரு கிளிக் கூண்டு கொடுக்குறதா - யாதும் ஊரே ஏட்டில கேலிச் சித்திரம் போட்டிருக்கிறாங்க. பரீட்சையே இல்லன்னா - அது கொல்லைப்புறமா குலக்கல்விதான்.

**மன்னார்சாமி:** ஜனங்க - தலைதூக்காமப் பண்ண திட்டம் போடறதுன்னா அது பிஜேபிதான் சாமி.

**வெங்கடேசய்யர்:** என்னா மன்னார் சாமி - பாரதிய மஜ்தூர் சங் - என்கிற ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் - தத்தோபாங் தெங்டி - வாஜ்பாயுக்கு எதிரா கிளர்ச்சி செய்யறார். நீ ஆட்சி செய்யறது சரி இல்லை. பதவி விலகுன்னு, அதுக்கு என்னா சொல்றே?

**மருதமுத்து:** அதாவது நாட்டைக் காட்டுமிராண்டி காலத்துக்குக் கொண்டு போற வேகம் பத்தாதுங்கறாரோ?

**மன்னார்சாமி:** மக்கள் காட்டுமிராண்டியா இருந்தாத்தானே - நாட்டையே எவன் கிட்டே யாவது வித்து சாப்புட முடியும். இப்ப ஆந்திராவிலே 172

படிப்பகம்

www.padippakam.com



லம்பாடா ஆதிவாசிக் குழந்தைகளைக் கிட்டதட்ட ரூ.2 கோடிக்கு வித்திருக்காங்களாம் - வெளிநாட்ல.

மருத்துமுத்து: குழந்தை மட்டுமில்லை மன்னார் சாமி. ரூ.6000 கோடி - பால்கோ அலுமினிய தொழிற்சாலையை ரூ.550 கோடிக்கு ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு வித்திருக்காங்க. வித்தவர் - மகாபுனிதம்னு ஒரு காலத்தில் கருத்தப்பட்ட முன்னாள் பத்திரிகையாளர் - இந்நாள் மத்திய அமைச்சர் - அருண்ஷோரி. ஸ்டெர்லைட்டுக்கு எதிரா தூத்துக்குடியில கிளர்ச்சி பண்ணின வைகோகூட இந்த விற்பனைக்கு எதிரா வாயத் திறக்கலே.

வெங்கடேய்யர்: (குரலைக் கருணாநிதி மாதிரி மாற்றிக் கொண்டு) நாமணக்க நன்றி சொல்லி, தலை தாழ்த்தித் தாள் வணங்கி - இந்தத் தேர்தல் அறிக்கை இப்பப் புலம்பி என்னய்யா பிரயோசனம்?



மருதமுத்து: வசன மழையில் அரசியல் பயிர் விளையற தில்லை - என்று ஜூனியர் விகடனில் சோலை அதற்கும் பதில் சொல்லி இருக் கிறார். 15 தடவை போட்டிக்காகவே போட்டி போடும் விபூதி கோவிந்தன் பற்றி ஏதாவது சொல் லுமே அய்யரே?

வெங்கடேசய்யர்: என்னத்தைச் சொல்றது? தாளுக்கும் மசிக்கும் கேடு! ஆனானப்பட்டவன் தேர்தல்ல நின்னே - ஓட்டு சதவீதம் 60 தாண்ட மாட்டேங்குது. முகவரி இல்லாதவர் தேர்தல்லே நின்னு என்ன ஆகப் போவுது?

மருதமுத்து: அதானே! ஏன் அய்யரே வாக்களிப்பு சதவீதம் வரலாறு காணாத வீழ்ச்சி?

வெங்கடேசய்யர்: இதுக்கு மம்தா பானர்ஜி பதில் சொல்லியிருக்காய்யா - கள்ள ஓட்டு போட முடியாதுன்னுதான் மின் அணு எந்திரத்தைப் பார்த்து இடது கம்யூனிஸ்ட் மிரளுது-ன்னு. அது வங்காளத்தில என்னோட சம்சயம் - தமிழ்நாட்டில கள்ள ஓட்டு குறைஞ்சதுதான் சதவீதம் குறைஞ்ச காரணம்ங்கறது.

மருதமுத்து: இருந்தாலும் கருணாநிதிக்கு மிக மோசமான தோல்வி இல்லியா?

வெங்கடேசய்யர்: மக்கள் ஒரு கணக்கு போடறா. விவசாயிக்கு விலை இல்லை. நெசவாளிக்கு வருமானம் இல்லை. மேம்பாலமும், டைடல் பார்க்கும் இந்த ஏழைகளை எரிச்சல் படுத்தியிருக்கும் போலிருக்கு. கடைசித் தேர்தல்னு சொல்லிப் பார்த்தார் - எம்ஜிஆர் திரும்பி வந்தா அவருகிட்டே கொடுத்துடுறேன் ஆட்சியைன்னு முன்னே சொன்ன மாதிரி! எம்.ஜி.ஆருக்கு ஜே. துரோகம் பண்ணினவர்னு சொன்னார். நெல், கரும்பு, தேயிலை, கொப்பரைத் தேங்காய், எல்லாம் ஒழிந்தது. ஸ்டாண்டர்டு மோட்டார் - பின்னி ஆலை திறப்பதா தேர்தல் அறிக்கை 1996 -லே ஆனா ஒன்னும் பண்ணலேல. சர்க்காரியா கமிஷனில் மாட்டி - இந்திராகாலில் விழுந்து தப்பிச்சதை ஜனங்க நினைப்பு வச்சிருப்பாங்க போல. எல்லாம் போச்சி.

மருதமுத்து: கிளம்பறதுக்கு முந்தி ஒரு கவிதை சொல்றேன். சகாராவின் தாகம் -ங்கிற தணிகைச் செல்வன் நூலில் வந்தது 'புதிய காற்று' மே 2001ல் எழுதியிருக்கிறார்கள்:

இரண்டு கல் தொலைவு நடந்தால்

ஒரு குடம் தண்ணீர்

ஏழுகல் தொலைவில் பள்ளிக் கூடம்

இருபதுகல் பயணம் செய்தால் மருத்துவமனை

அதனால் என்ன?

கூப்பிடு தூரத்தில் வாக்குச்சாவடி

போதாதா?

மன்னார்சாமி: கொன்னுட்டீங்கசாமி. இன்னும் அஞ்சு வருஷம் கழிச்சி கூப்பிடு தூரத்தில் மறுபடியும் வாக்குச் சாவடி வரும். ஆரம்பக் கல்வி - நில ஒதுக்கீடு - குடிதண்ணீர் - குடியிருப்பு மனை எதுவும் வராவிட்டாலும்!

மருதமுத்து: சரி, அய்யரே, இன்னிக்கு என்ன பஞ்சகச்சத்தில் வந்திருக்கீர்?

வெங்கடேசய்யர்: பேண்ட் சட்டை எல்லாம் ஏ.ஜி. ஆபீஸோட போச்சு. இன்னிக்குப் பஞ்சகச்சமும் தர்ப்பைப் புல்லுந்தான் காசு பண்ணுது. ஒரு வீட்டில் 'சிரார்த்தம்' (கருமாதி) பண்ணிப்புட்டுத் தான் வர்றேன். கருணாநிதி ஆட்சிக்கு சிரார்த்தம்னு கூட வைக்கலாம். ஸ்வீட் கருமாதி வீட்டுப் பலகாரம்தான்!

(மருதமுத்து தூ என்று ஜீரணமாகி விட்ட இனிப்பைத்துப்ப முயற்சிக்க, மன்னார்சாமி விழுந்து விழுந்து சிரிக்கிறார்) ●

www.padippakam.com



# அறிவியல் தமிழின் தேவை

-மருத்துவர் சு.நரேந்திரன்
பேராசிரியர், அறுவை மருத்துவத்துறை
தஞ்சை மருத்துவக் கல்லூரி

சங்கம் மருவிய காலமாகிய கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின் சுமார் 200 ஆண்டுகள் தமிழகம் ஓர் இருண்ட காலத்தில் இருந்தது என்பர். இவ் இருண்ட காலத்தில் யார் ஆண்டார்கள், எப்படிப்பட்ட ஆட்சிமுறை அமைந்திருந்தது என்பதற்கான சரியான வரலாற்று ஆதாரங்கள் அதிகம் இல்லை. ஆனால், கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பல்லவர், பிற்காலச் சோழர். மொகலாயர், மராத்தியர், நாயக்கர். ஆங்கிலேயர் என்று பல்வேறு இன - மொழியினர் ஒருவர் பின் ஒருவராக ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். மாறி மாறி அமைந்துள்ள ஆட்சியாளர்களால் தமிழகத்தில் மொழிக் கலப்பும், கலாச்சாரக் கலப்பும் பெரிதும் ஏற்படலாயின. கி.பி. 7,8,9 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தை ஆண்ட ஆட்சியாளர்கள் முதலில் பிராகிருத மொழியையும், பின்னர் வட மொழியையும் தங்கள் ஆட்சியிலும் சமய வாழ்விலும் பெரிதும் கடைப்பிடித்தனர். மேலும், குருகுலக் கல்வி முறையை உருவாக்கி, அதனை மதக்கோட்பாடுகளைப் பரப்பும் இடமாக மாற்றி வட மொழிக் கருத்துக்களை விளக்கும் மையங்களாகச் செயல்பட வைத்தமையால் வடமொழிச் சொற்கள் பயன்பட ஆரம்பித்தன. வட மொழி அறிவு பெற்றவர்களே அறிவு பெற்றவர்களாகவும், ஞானம் பெற்றவர்களாகவும் கருதப்பட்டு வந்தனர். இதனால், உரையாசிரியர்களின் உரையிலும் வடமொழிச் சொற்கள் கலந்தன. இதனைக் கண்ணுற்ற இலக்கண ஆசிரியர் பவணந்தியார் வடமொழிச் சொற்களைத் தமிழ் மொழியின் ஒலியனியல் அமைப்புக்கேற்ப எழுத வேண்டுமென வரையறை செய்துள்ளார். மேலும், தமிழுக்கே இலக்கணம் செய்த ஈசான தேசிகர் என்னும் புலவர் வட மொழியைப் புகழ்ந்து எழுதி, தமிழ் தனியாக இயங்க முடியாது என எழுதினார். இதனடிப்படையில் வடமொழியைப் போற்றுவோர் அதனைத் தமிழோடு கலந்து மணிப்பிரவாள நடை ஒன்றை உருவாக்கினர். ஆங்கிலேயர் தங்கள் வருகைக்குப் பிறகு தங்கள் மதக் கொள்கைகளை மக்களிடையே பரப்ப வேண்டி அவர்கள் தமிழ்மொழியைக் கற்க ஆரம்பித்தனர். கற்றுக் கொண்டவர்களுக்குத் தமிழறிந்த வடமொழி வல்லார்கள் வடசொற்கள் கலந்தே தமிழையும் கற்றுத் தந்தனர். அதனால், அச்சுத்தமிழ் ஆரம்பம் முதல் அவர்களது எழுத்தான மணிப்பிரவாள நடையிலேயே அமைந்தது. பல்வேறு சாஸ்திரங்கள், ஸ்தலபுராணங்கள், அனைத்தும் மணிப்பிரவாள நடையிலேயே அமைந்தன.

## அறிவியல் தமிழ் வரலாறு

தொல்காப்பியர் காலம் தொடக்கம் இலக்கண, இலக்கிய, சமயச் செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டு செயல்பட்டு வந்த தமிழ்மொழி அறிவியல் கருத்துகளையும் பதிவு செய்யும் ஊடகமாகவும் செயல்பட்டு வந்துள்ளது.

தமிழகத்தில் தொடக்கக் காலத்தில் மருத்துவமும், வேளாண்மையும் குறிப்பிடத்தக்க துறைகளாக விளங்கின. இயற்கை வளங்களான செடி, கொடி, மரம் ஆகியவற்றின் வேர், இலை, பூ, காய் போன்ற பகுதிகளைப் பருவ நிலைக்குத் தகுந்தவாறு சமைத்துப் பயன்படுத்தும் முறைகளைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இவற்றிற்கு மருத்துவக் குணங்கள் இருப்பதை அறிந்து நோய்க்குரிய மருந்தாகப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தையும் அறிந்திருந்தனர். இந்த நிலையே 'மருந்து' என்று நோய் தீர்க்கும் பொருளைக் கண்டறிந்த நிலையாக இடம் பெறுகிறது. அன்றாட வாழ்வில் மனிதன் பெற்றுக் கொண்ட அனுபவத்தினடிப்படையில் மிகுதியாக மருத்துவப் பயனுள்ள தாவரங்களைத் தானே பயரிட்டுக் கொள்ளும் முறைகளை வளர்த்துக் கொண்டான். அதற்காக நிலத்தைப் பண்படுத்திப் பயன்படுத்தும் முறையையும் அறிந்திருந்தனர். இந்நிலை 'வேளாண்மை' என்னும் அறிவியலின் தொடக்க நிலையாக உருவெடுத்தது. தமிழகத்தில் அறிவியல் நூல்களைக் காட்டிலும் இலக்கியங்கள்தான் பெருமளவில் எழுதப்பட்டன. அதிலும் வாழ்வியல் இலக்கியங்கள், நீதி, அறிவுரை, பக்தி இலக்கியங்களாகவே உருவாயின. இவற்றிடையே சித்தர்கள் கண்ட சித்த மருத்துவமும், வான சாஸ்திரம், சோதிட நூல்கள், அளவையியல் அடிப்படையிலான கணித

படிப்பகம்

www.padippakam.com



நூல்கள் போன்றவையும் உருவாயின. வேளாண்மை அனுபவங்கள் பெரும்பாலும் பழமொழிகளாகவே, வாய்மொழியாக வழங்கப்பட்டது. வேளாண் நிலங்களை அளக்க மரபு சார்ந்த அளவீட்டு முறைகள், நீர் பாய்ச்ச மரபு சார்ந்த நீர் இறைக்கும் தொழில் நுட்ப முறைகள், கால நிலைகளைப் பற்றிய வானியல் அறிவு ஆகியன தமிழர்களின் வழக்கில் இருந்துள்ளன. பின்னர், இச்செய்திகளைப் பாதுகாப்பதற்கு ஓலைச்சுவடிகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்க அறிவியல் வரலாற்றை அறியவும் ஆராயவும் வேண்டிய அவசியம் என்னவென்று நினைப்பின், குழந்தைக்கு உணவு கொடுக்காமல் அதன் அழகை மட்டும் புகழ்ந்து கொண்டிருந்தால் அதன் உடலும், அறிவும் வலுவுற்று வளர்ந்துவிட மாட்டா. சிறந்த அறிவு எனப் போற்றப்படும் அறிவியல் அறிவினைப் பரப்புவதற்கும் அதனை மேலும் வளர்ப்பதற்கும் தமிழ்மொழி வல்லதாய் வேண்டும். அறிவுத் துறைகள் அனைத்திலும் தமிழ் நூல்கள் பிறக்க வேண்டும். அறிவியலை வளர்க்கும் கருவியாக நம் மொழி அமைய வேண்டும். ஆனால், இன்றைய நிலை என்ன எனப் பார்க்கும்பொழுது நமக்குத் தெரிந்த நாம் கண்ட அறிவியல், நம் நாடு கண்ட தொழில்நுட்பம் நம் மொழியில் போதிய அளவு இல்லை. எனவே, அறிவியல் தொழில்நுட்பம் என்று வரும்பொழுது நம்மொழி வளர்ந்த நாட்டு மொழிகளிலிருந்து மட்டும் விலகியிருக்கவில்லை. அது நம்மிடமிருந்து விலகி இருக்கிறது. நம் மண்ணிலிருந்தும் விலகி நிற்கிறது. வரலாறு இதற்குப் பதிலளிக்குமா?

(தொடரும்)

# திராவிடர் மாணவர் இயக்க முன்னோடி தவமணி இராசன் மறைந்தார்



தந்தை பெரியாரால் மனமார மதிக்கப் பட்டவரும், திராவிடர் மாணவர் இயக்க முன்னோடியும், குழந்தை போன்ற தூய மனம் படைத்தவரும், எளிமையின் இலக்கணமாக இறுதி வரையில் இலங்கியவரும், அகவை வேறுபாடு சொந்த நிலை இவற்றைப் பார்க்காமல் தோழமையோடு அனைவரிடமும் பழகி வந்தவருமான தோழர் தவமணி இராசன், தம் 80ஆம் அகவையில், *10-5-2001* அன்று, சிவகாசியில் மறைந்து விட்டார் என்ற செய்தி நம்மை நட்டுவாக்காலி கொட்டி விட்டது போன்று, நெஞ்சில் நஞ்சை ஏற்றும் செய்தியாகும்.

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய போது, திராவிடரில் கல்லூரிக் கல்விக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றவர்கள் கொஞ்சம் பேரே ஆவர்.

*1940*க்குப் பிறகு தான் கல்லூரிகளில் திராவிட இன மாணவர்கள் படிப்பது பெருகத் தொடங்கியது. அப்போது கல்லூரிகளிலும், அரசு அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும் குடிநீர் வைக்க இரண்டு பானைகள் இருக்கும். அப்படிக் குடந்தை அரசினர் கல்லூரியிலும் இரண்டு பானைகள் இருந்தன. ஒன்று பார்ப்பனர்க்கு மட்டும்; இன்னொன்று மற்றவர்களுக்கு.

இந்தப் பிறவி பேத நடப்பை, பிறவி வேறுபாட்டு இழிவை எதிர்த்து, முதலில் போர்க் கொடி தூக்கியவர்கள் குடந்தை அரசினர் கல்லூரி மாணவர்கள்தாம். *1943* இல் அங்கே தொடங்கிய அந்தப் போரின் முன்னோடியே மறைந்த நம் தவமணி இராசன் ஆவார்.

அன்று இவருக்குத் துணையாக நின்றவர்கள் கருணானந்தம், ஜி. இலட்சுமணன் போன்றோர் ஆவர்.

இவர்கள் குடந்தை அரசினர் கல்லூரிக்குத் தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் அழைத்து உரைகளை ஆற்றச் செய்ததின் விளைவுதான் - கல்லூரிகளில் எல்லாம் திராவிடர் மாணவர் கழகங்களின் தோற்றம்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போர் வெற்றிக் களிப்பை அடுத்து, கல்லூரி மாணவர்களை வென்றெடுத்து, இளைஞர் பட்டாளம் உருவாகிட அடித்தளம் இட்டவர் தவமணி இராசன்.

இதன் அடுத்த விளைவே, திராவிட மாணவர்கள் கோடை காலப் பரப்புரைப் பயணம். இதில் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், ஏ.பி. சனார்த்தனம், தவமணி இராசன், கருணானந்தம் போன்றோர் ஆவர். இவர்களில் ஈரோடு 'குடி அரசு' அலுவலகத்தில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றவர்கள் தவமணி இராசன், கருணானந்தம், மு. கருணாநிதி போன்றோர் ஆவர்.

அன்று கல்லூரி இளைஞர்களை ஈர்க்கும் மய்யப் புள்ளியாக விளங்கியவர் சி.என். அண்ணாத்துரை. கல்லூரி தோறும் சென்று மாணவர்களுடன் தங்கி அவர்களை உசுப்பி விட்டவர்கள் ஏ.பி. சனார்த்தனம், தவமணி இராசன் போன்றோர் ஆவர்.

இத்தகைய வரலாற்றின் அடித்தளமாக விளங்கிய தவமணி இராசன் 1998 செப்டம்பரில் தமிழக அரசினரால் பெரியார் சமூக நீதி விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார் என்பது அறியத் தக்கது. அதற்கு அடுத்த நாள் அவரை நேரில் கண்டு நாம் அளவளாவினோம். இன்று அவர் புகழுருவில் நம் நெஞ்சில் நிறைந்தவராக ஆகி விட்டார்.

வாழ்க தவமணி இராசன் புகழ்!

படிப்பகம்

www.padippakam.com



# புலிகள் குவித்த மாபெரும் வெற்றி



இனவெறி பிடித்த சிங்கள அரசு தான் சமாதான முயற்சிக்கு எப்போதும் தயாராக உள்ளது போன்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத்தான் அமைதியை விரும்பாத பயங்கரவாத இயக்கம் என்பது போலவும் ஒரு தோற்றத்தைத் தொடர்ந்து உருவாக்கி வருகிறது. இதற்கு மாறாகப் புலிகளோ கடந்த ஆண்டு கிருஸ்துமஸ் நாள் முதல் தாமாக முன்வந்து சண்டை நிறுத்தம் அறிவித்தனர். வழக்கம் போல் சிங்கள அரசு இந்த முயற்சிக்கு ஒத்துழைப்புத் தராமல் அப்பாவித் தமிழர்களைக் கொல்ல ஏராளமான அதி நவீன படைக் கருவிகளை வாங்கிக் குவித்தது; வன்னெஞ்சோடு குண்டு மழை பொழிந்து தொடர்ந்து மக்களைக் கொன்று வந்தது. இந்நிலையிலும் புலிகள் ஆத்திரமோ அவசரமோ காட்டாமல் நான்கு மாதங்கள் சமாதான முயற்சிகளுக்கு அறிகுறியாகச் சண்டை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர்.



புலிகளின் நல்லெண்ணத்தைச் சிங்கள அரசு தவறாகப் புரிந்து கொண்டது. சண்டை நிறுத்தம் செய்து வந்த புலிகளின் நிலைப்பாட்டைக் கோழைத்தனம் என்று கருதிக் கொண்டு 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களுடன் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் துணையோடு 'தீச்சுவாலை' என்கிற பெயரில் பெரும் போரைத் தொடங்கியது. வீறு கொண்டெழுந்த புலிப்படை நான்கே நாட்களில் 400 இராணுவ வீரர்களைக் கொன்றும் 2000க்கும் மேற்பட்டோரைப் படுகாயப்படுத்தியும் தன் ஒப்பற்ற வீரத்தை மீண்டும் ஒருமுறை உலகிற்குப் பறைசாற்றியுள்ளது. பெருந் தோல்வியைச் சந்தித்த சிங்கள இராணுவம் அஞ்சி நடுங்கிப் பின் வாங்கியது.

தீச்சுவாலை
புஸ் வாணமானது
400 சிங்கள
இராணுவத்தினர் பலி
2000 பேர் படுகாயம்
புறமுதுகிட்டு
ஓட்டம்

இந்நிலையிலும் இந்திய அரசு ஈழத் தமிழர் பிரச்சனையில் உண்மையாக நடந்து கொள்ளாமல் 'அஃது ஓர் உள்நாட்டுப் பிரச்சனை. அதில் இந்தியா தலையிடாது' என்று தொடர்ந்து பிதற்றித் திரிகிறது. இந்தச் செய்தியில் இந்திய அரசை நெருக்குதல் செய்ய இங்குள்ள எந்த வாக்கு வேட்டை அரசியல் கட்சிக்கும் வக்கில்லை. வெட்கக் கேடு! பெரிய வெட்கக் கேடு!

-வாலாசா வல்லவன்

படிப்பகம்

www.padippakam.com



# 'கடவுள் அறிய' சுருட்ட வருகிறார்கள்!

- தமிழேந்தி

தமிழகச் சட்டப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சி மிகவும் சுவையானதாகும். பதவி ஏற்பின் போது 'கடவுளறிய' என்றோ 'உளமார' என்றோ சொல்லி உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் நடைமுறை உள்ளது. அதிமுக உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் கட்சித் தலைவி தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்பே தன்னுடைய உயிர்த் தோழியுடன் தமிழ்நாட்டில் உள்ள முதன்மையான கோயில் படிகளை



ஒன்று விடாமல் ஏறி இறங்கியவர். செய்யாத யாகமில்லை; வேண்டாத தெய்வமில்லை. தலைவி எவ்வழி அவ்வழி தொண்டர்கள். பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கா. காளிமுத்து, அரவக்குறிச்சி உறுப்பினர் லியாவுதீன் சேட் ஆகிய இருவர் தவிர மற்ற அனைவருமே 'கட வுளறிய' பதவி நாற்க ாலியி ல் அமர்ந்துள்ளனர்.

திமுக உறுப்பினர்கள் எல்லோருமே கடவுள் மறுப்பாளர்கள் அல்ல வென்றாலும், பெருங்காயம் இருந்த பாண்டம் என்பதற்கு அறிகுறியாகவோ என்னவோ 'உளமார' என்று கூறி உறுதி ஏற்றுள்ளது சற்று ஆறுதலான செய்தியாகும்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மார்க்சிஸ்டு, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் இரா. திருமாவளவன், குடியரசுக் கட்சித் தலைவர் செ.கு. தமிழரசன், காங்கிரஸ் உறுப்பினர்கள் போளூர் வரதன், செயக்குமார், தமாகா உறுப்பினர் அக்கீம், எம்ஜிஆர் அதிமுகவைச் சேர்ந்த ஆஸ்டின் ஆகியோரும் ஆண்டவனைத் துணைக்கழைக்காமல் மனச்சான்றுப்படி உறுதி மொழி ஏற்றுள்ளனர். பா.ம.க உறுப்பினர்களில் பெரும்பாலோர் 'உளமார' என்று கூறியும் ஒரு சிலர் கடவுள் பேராலும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

திமுக உள்ளிட்ட எந்தக் கட்சிக்கும் காலில் விழும் கலாச்சாரம் என்பது புதிய ஒன்றல்ல. அமைச்சர்களாகி விட்டால் என்ன, வயதில் மூத்த பொன்னையன், இளையவரான தம்பித்துரை இருவருமே முதல்வர் அம்மாவை வணங்கி எழுந்தார்க ளென்றால் எம்.எல்.ஏக்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்!

ஊரகத் தொழிலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள கே. பாண்டுரங்கன் என்பவர் அமைச்சராகப் பதவி ஏற்ற நாளிலேயே அம்மா முன்னால் தவடையில் போட்டுக் கொண்ட பக்தசிரோன்மணி.

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்பது எல்லா மதத்தாரும் சொல்லுகின்ற தாரக மந்திரம். நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்பாளர்களாய் நின்ற பெரும்பாலானவர்கள் நல்ல நேரம் பார்த்து, நல்ல சகுனம் பார்த்து, ஆண்டவனை வணங்கி விட்டுத்தான் வேட்பு மனுவே தாக்கல் செய்தார்கள். ஆனால் 234 பேரைத் தவிர மற்ற எல்லோருமே தோற்றுப் போனார்களே! ஆண்டவன் சக்தி என்னவாயிற்று?

ஆண்டவனை உண்மையிலேயே இவர்கள் நம்புவதாக இருந்தால் தன்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு உண்மையானவர்களாய் இவர்கள் நடந்து கொள்வார்களா? கையூட்டுப் பெறாமல், ஊரை அடித்து உலையில் போடாமல், தன் மனைவி, மக்கள் பரம்பரைப் பரம்பரையாய் அனுபவிக்கச் சொத்து சுகம் தேடிக் கொள்ளாமல் எளிய மக்கள் தொண்டர்களாய் வீதியில் வலம் வருவார்களா?

தங்களைக் காப்பாற்றும் என இவர்கள் நம்புவாய்ச் சொல்லும் கடவுளர்களுக்கே ஒழுக்கம் இல்லையே! பொய், பித்தலாட்டம், ஒழுக்கக் குறைவு, நாணயக் கேடு, மனிதனும் செய்யக் கூசும் கீழான செயல்கள் அத்தனையும் எல்லாக் கடவுளர் கதைகளிலும் எழுத்துப் பிசகாமல் அப்படியே உள்ளனவே! கடவுளின் அவதாரங்கள் என்று சொல்லப்படும் சங்கராச்சாரி, புட்டப்பர்த்தி சாயிபாபா, ஆண்டவனின் அருள் தூதர்களான பாதிரிமார்கள், முல்லாக்கள் என்கிற அத்தனைப் பேருமே ஏமாற்றுப் பேர் வழிகள்தாமே! எனவே ஆண்டவன் பேரைச் சொல்லி நடத்தப்படும் அத்தனை அட்டூழியங்களையும் மக்கள் முன்னால் போட்டு உடைக்க வேண்டும். 'கடவுளை மற; மனிதனை நினை' என்னும் தந்தை பெரியாரின் தத்துவத்தை முன்னை விடவும் முனைப்போடு பரப்புரை நாம் செய்ய வேண்டும்.

*உடமையாவும் பொதுமையாக*
*உலகுநன்று வாழ்ந்ததாம்*
*கடையர்செல்வர் என்றதொல்லை*
*கடவுள்பேர் இழைத்ததே*

- புரட்சிக்கவிஞர்

படிப்பகம்

www.padippakam.com



# மின்சார உற்பத்தியில் தனியார் பங்கேற்பு - ஓர் ஆய்வு

பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன்

1957இல் மின்சார வாரியங்கள் எல்லா மாநிலங்களிலும் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாரியங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதை மாநில மக்களுக்கு வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயல்பட்டுவந் தன . இவை மாநில அரசுகளால் தோற்றுவிக்கப்பட்டிருப்பினும் தனித்தியங்கும் நிறுவனங்களாகும். கொள்கைகளை வகுப்பது மட்டும் மாநில அரசின் அதிகார எல்லைக்குட்பட்டது. இவை வணிக நோக்கில் வருவாய் ஈட்டும் நிறுவனங்களாக இயங்காமல் தொண்டு நிறுவனங்களாகவே இயங்கி வந்தன எனலாம். காலப் போக்கில் மின்சார வாரியங்கள் தனித்தியங்கும் நிறுவனங்கள் என்ற நிலைமை போய், மாநில அரசின் தலையீடு காரணமாக அரசின் மற்றுமொரு துறை போலவே இயங்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டன.

மின்சார வாரியங்களில் அரசின் குறுக்கீடு காரணமாகப் பயனீட்டாளர்களில் சில பிரிவினர்க்குச் சலுகைக் கட்டணமும், வேளாண்மை, குடிசைகள் போன்றவற்றிற்கு இலவச மின்சாரமும் வழங்க வேண்டிய கட்டாயத்திற்கு மின்சார வாரியங்கள் உள்ளாக்கப்பட்டன. இதனால் மின்சார வாரியங்களுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டன.

இவ்வாறு அரசின் வற்புறுத்தல் காரணமாக மேற்கொண்ட கட்டணச் சலுகை, இலவச மின்சாரம் காரணமாக ஏற்படும் இழப்புகளைச் சரிக்கட்ட மின்சார வாரியங்களுக்கு மாநில அரசுகள் இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான மாநிலங்களில் உள்ள அரசுகள் இழப்புகளை முழுமையாக ஈடுகட்டாமல் ஒரு பகுதியையே அளித்து வந்தன. இதனால் வாரியங்களின் கட்டணச் சுமை அதிகரித்ததோடு அவை இழப்பிலேயே இயங்கி வருகிற சூழ்நிலை ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டைய மின்சாரம் வழங்கும் சட்டப்படி மின்சார வாரியம் தான் போட்ட முதலுக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு வருவாயைக் குறைந்த பட்சமாக ஈட்ட வேண்டும் என்ற விதியிருந்தது. அவ்வாறு ஈட்டும் வருவாயைக் கொண்டு சேமிக்கும் தொகையிலிருந்து மின் சாதனங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும், புதிய மின்சாரத் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்தவும் வழிவகைகள் காணப்பட்டிருந்தன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் 1991இல் மின்சார உற்பத்தியைத் தனியார் மயமாக்கும் கொள்கை வகுக்கப்பட்டது. வெளிநாடுகளில் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய பெரிய நிறுவனங்கள் இந்தியாவில் மின்சார உற்பத்தியில் முதலீடு செய்ய வேண்டி அழைக்கப்பட்டனர். வெளிநாட்டிலிருந்து ஒரு சில பெரிய நிறுவனங்கள் இந்தியாவில் மின் உற்பத்திக்காக முதலீடு செய்ய முன்வந்தன. அவற்றில் ஒன்றுதான் என்ரான் என்ற அமெரிக்கக்

## ஆ.கு. செயம்மாள் - கி.த.பச்சையப்பன் மணிவிழா



தமிழகத் தமிழாசிரியர் கழக முன்னாள் தலைவரும் பிரஞ்சு இந்திய விடுதலைப் போராட்ட மறவரும் ஆகிய புலவர் கி.த.பச்சையப்பன் துணைவியார் ஆ.கு. செயம்மாள் மணிவிழா 25.3.2001 அன்று அவர்தம் இல்லத்தில் நடைபெற்றது. தமிழியக்க ஆர்வலர்களும் குடும்ப நண்பர்களும் திரளாகப் பங்கேற்றனர். கி.த.ப. தொல்காப்பியன், கி.த.ப. திருமாற்ன், கி.த.ப. கார்க்கி, கி.த.ப. பகத்சிங்கன், ப.தொ. தமிழ்ச் செல்வன் (பெயரன்) ஆகியோர் அன்புடன் வரவேற்று இனிய விருந்தளித்து மகிழ்ந்தனர். நிகழ்ச்சியின் மகிழ்வாகச் சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.200/- வழங்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



கம்பெனியாகும்.

என்ரான் என்ற அமெரிக்க நிறுவனத்துடன் மராட்டிய மாநிலத்தில் அன்றைய காங்கிரசு முதல்வரான சரத் பவார் ஆட்சி மின் சார உற் பத் தி செய் ய ஒரு ஒப்பந்தம் போட்டது. அந்த ஒப் பந் தத் தி ன் அடிப்படையில் என்ரான் நிறுவனம், 'தபோல் பவர் கம்பெனி' என்னும் பெயரில் நாப்தா என்ற எரிபொருள் கொண்டு ஒரு அனல் மின் நிலையத்தை அமைக்க முற்பட்டது. மின் உற்பத்தியைத் தனியாருக்கு விடுவதென முடிவெடுத்து அந்த முடிவைச் செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுந்தன.

தனியார் உற்பத்தி செய்யும் மின் விசையை என்ன விலைக்கு வாங்குவது என்பது பற்றி யாருக்கும் போதுமான பட்டறிவு இல்லை. இதன் காரணமாகக் கண்ணை மூடிக் கொண்டு மேற்சொன்ன நிறுவனம் காட்டிய ஒப்பந்தத்தில் சரத்பவார் அரசு கையெழுத்திட நேர்ந்தது. அமெரிக்க என்ரான் தபோல் பவர் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதில் பல முறைகேடுகள் உள்ளன என்று சொல்லி அப்போது எதிர்க்கட்சிகளாயிருந்த சிவசேனா, பாரதிய சனதாக் கட்சிகள் ஆளுங் கட்சிக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுப்பின. என்ரான் கம்பெனிக்கு சரத்பவார் விலைபோய் விட்டார் என்றும் அவர் அக்கம்பெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துவிட வேண்டும் என்றும் சொல்லி எதிர்த்து வந்தன. இதற்கிடையில் சரத் பவார் ஆட்சி போய், சிவசேனா - பாரதிய சனதாக் கட்சியின் ஜனநாயக முன்னணி அரசு பதவிக்கு வந்தது.

சிவசேனா - பாரதிய சனதாக் கூட்டணி ஆட்சி வந்ததும், என்ரான் கம்பெனியுடன் மராட்டிய அரசு செய்து கொண்ட மின் உற்பத்திக்கான ஒப்பந்தம் முறிந்து விடும் என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அதற்கு நேர் மாறாக முதலில் எதிர்த்து வந்தவர்கள் பின்னர் என்ன மாயம் நிகழ்ந்ததோ தெரியவில்லை - ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து சரத்பவார் ஆட்சியில் போட்ட ஒப்பந்தத்தை விட மிகவும் பாதகமான நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பாரதிய சனதா - சிவசேனாக் கட்சிகளின் கூட்டணி அரசு என்ரான் நிறுவனத்திற்கு முன்பு காட்டிய எதிர்ப்பைக் கைவிட்டு என்ரான் நிறுவனத்தை மின் உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதியளித்ததன் பின்னணி மிகவும் சுவையானது. என்ரான் பற்றி மாநில அரசுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்ல மட்டுமே ஒரு சிறிய தொகையாக 20 மில்லியன் டாலரைச் (சுமார் ரூ.100 கோடி) செலவிட்டதாம்! (இதை விடப் பெரிய திமிங்கலங்கள் நம் மாநிலத்திலும் இருந்தன - இருக்கின்றன என்பது வேறு சங்கதி). இப்படிக் காட்ட வேண்டியதைக் காட்டிப், பெற வேண்டியதைப் பெற்றுள்ளது என்ரான் நிறுவனம்.

தனியார் துறை தொடங்கியுள்ள மிகப் பெரிய மின் உற்பத்தி திட்டம் என்ரான் நிறுவனத்தின் தபோல் பவர் கம்பெனியாருக்கு இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட்டுக்கு ரூபாய் 8 வீதம் விலை கொடுத்து வாங்கிக் கொள்வதாக மராட்டிய மின் வாரியம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஒப்பந்தத்தில் இன்னும்பல வேடிக்கையான நிபந்தனைகளும் போடப்பட்டுள்ளன. அதாவது மின்வாரியம் தனக்குத் தேவையில்லா விட்டாலும் கூட தபோல் பவர் கம்பெனி உற்பத்தி செய்யும் முழு மின்சாரத்தையும் வாங்கிக் கொள்ள வேண்டும். கட்டண விகிதமோ வேறு எங்கும் கேள்விப்பட்டிராத அளவுக்கு மிக உயர்ந்த கட்டணம். தேசிய அனல் மின்சார நிறுவனமும், வீடியோகோன் (வடசென்னை), இந்துஜா, இர்மா போன்ற தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களும் கூட யூனிட் ஒன்றுக்கு மிகக் குறைந்த கட்டணமாக ரூ.1.70 என்றும், அதிகபட்சக் கட்டணமாக ரூ.2.70 என்றும் மின் வாரியங்களுக்கு விற்க ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் போட்டுள்ளன. ஆனால் அமெரிக்கக் கம்பெனியான தபோல் பவர் கம்பெனியிடமிருந்து மராட்டிய அரசு யூனிட்டுக்கு ரூ.8 வீதம் விலை கொடுத்து வாங்க ஒப்புக் கொண்டது. இவ்வாறு ஒப்பந்தம் போடும்போது மின்சாரம் தொடர்பான தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்களின் கருத்தறிந்து ஒப்பந்தம் போடப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி மிக உயர்ந்த விலை கொடுத்துத் தனியார் மின்சாரத்தை வாங்குவதற்கான அவசர நெருக்கடியோ, மின்சாரப் பற்றாக்குறையோ ஏற்படவில்லை. அரசியல் வாதிகள் எளிதாக மக்கள் கண்களை மறைத்து விட்டுத் தனியார் கம்பெனிகளை நாட்டுக்குள் நுழைய விடுவதன் மூலம் நாம் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கலாம் என்ற எண்ணத்தில் தனியாரிடம் விலை போயுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



தபோல் பவர் கம்பெனி முதற் கட்டமாக அமைத்துள்ள 740 மெகாவாட்டு மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை முழுமையாக மராட்டிய மின் வாரியம் வாங்கிக் கொள்ள வேண்டும். 25 கோடி யூனிட் மின்சாரத்தை வாங்கும் போது மராட்டிய மின் வாரியத்திற்கு மாத மொன்றுக்கு ரூ.127 கோடி இழப்பு ஏற்படுகிறது. ஏனெனில் யூனிட் ரூ.8 வீதம் வாங்கி அதில் 20 விழுக்காடு ஒழுக விட்டது (Line Loss) போக மீதமுள்ள மின்சாரத்தைப் பயனீட்டாளர்களுக்குச் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு ரூ.2.50 வீதம் வழங்கியாக வேண்டிய கட்டாயத்தினால் இந்தப் பெரும் இழப்பு. இது முதற் கட்டமாக ஏற்பட்டு வரும் இழப்பு. இரண்டாம் கட்டமாகத் தபோல் பவர் கம்பெனி கட்டவுள்ள மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையும் உற்பத்தி செய்யும் மின்சாரத்தையும் முழுதாக வாங்கத் தொடங்கினால் மராட்டிய மின் வாரியத்திற்கு மாத மொன்றுக்கு ரூ.442 கோடி இழப்பு ஏற்படும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆண்டொன்றில் மொத்தம் ரூ.5000 கோடிக்கு மேல் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இப்போது முதற் கட்ட மின் உற்பத்தி நிலையத்திலிருந்தே வாங்கிய மின்சாரத்திற்கு மராட்டிய மின் வாரியம் மற்ற செலவினங்களைக் குறைத்துக் கொண்டும், வாங்கிய முதலீட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் படாத பாடுபட்டு, சென்ற நவம்பர் 2000 இறுதி வரை உள்ள கட்டணத்தைச் செலுத்தியுள்ளது. ஒப்பந்தத்தில் உள்ளபடி மராட்டிய மின்வாரியம் வாங்கிய மின்சாரத்திற்கு உரிய தொகையைக் கட்ட முடியா விட்டால் மாநில அரசும், அதனாலும் முடியாவிட்டால் மைய அரசும் தபோல் பவர் கம்பெனிக்குக் கட்ட வேண்டும். ஏற்கெனவே உற்பத்தி செய்த மின்சாரத்தை ஒரு யூனிட் கூடப் பயன்படுத்தாத நிலையிலும் ஒப்பந்தப்படி முழுப்பணத்தையும் மின் வாரியம் தபோல் பவர் கம்பெனிக்குக் கட்டியுள்ளது. தனியார் உற்பத்தி நிறுவனங்கள் மட்டும் எவ்வித இழப்புக்களுக்கும் உட்படா என்பது தனியார் மயமாக்கக் கொள்கையில் ஒரு கூறு. சலுகைக் கட்டணம், இலவச மின்சாரம் ஆகியவற்றால் மின்வாரியங்களுக்கு இழப்பு ஏற்படலாம். அதுபற்றி மைய, மாநில அரசுகளுக்குக் கவலையில்லை. ஆனால் தனியார் நிறுவனங்கள் மட்டும் இழப்பை ஏற்க மாட்டார்கள். அப்படி அவர்களையும் இழப்பை ஏற்றுக் கொள்ளும்படி ஒப்பந்தத்தில் நிபந்தனை போட்டால் மின் உற்பத்தித் திட்டங்களை எடுத்துச் செய்யத் தனியார் முன்வரமாட்டார்கள்.

மின்சாரத் தேவை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பெருகி வரும் தேவைக்கேற்ப மின்சார உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை. பற்றாக் குறையை இப்போதிருக்கிற சூழ்நிலையில் தீர்க்கவே முடியாது . வரப் போகும் பத்தாண்டுக் காலத்தில் ஏற்படும் மின்சாரப் பற்றாக்குறையைச் சமாளிக்கப் பத்து இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய முதலீட்டுக்கு எங்கே போவது? அதனால்தான் பிற நாடுகளின் முதலீட்டை வரவேற்கிறார்கள். தனியார் மயமாதல் அதிகரிக்கும் போது சலுகைக் கட்டணமோ இலவச மின்சாரமோ அளிக்கவியலாது. ஆனால் பல மாநில அரசுகள் இவற்றை ஒழித்து விட்டுக் கட்டுப்படியாகிற கட்டணங்களை மின்சாரத்திற்கு விதித்தால் மக்கள் ஆதரவினை இழந்து விடுவோம் என்று அஞ்சி, கட்டண விகிதங்களை உயர்த்துவதைத் தவிர்த்து வருகின்றன. அரசியல் கட்சிகளுக்குள் போட்டிகள் அதிகரித்துள்ளதால் ஆளுங்கட்சிகள் தேர்தலைக் குறிவைத்துக் கட்டண உயர்வை ஒத்திப் போடுகின்றன. ஆனால் என்றைக்கிருந்தாலும் மின்சார உற்பத்தி தனியார் மயமான பிறகு சலுகைக் கட்டணமோ இலவச மின்சாரமோ அளிப்பது இயலாததாகும். அதுமட்டுமின்றிக் கட்டண விகிதங்களும் பலமடங்கு உயருவதையும் தவிர்க்க முடியாது. அப்படி உயர்த்த முடியாமற் போனால் மின்சார வாரியங்கள் நாட்டில் இயங்க முடியாது.

**ஆதி சங்கரர் பற்றி விவேகானந்தர்**

*சங்கரருக்குச் சவரம் செய்வதற்குப் பயன்படும் கத்தியைப் போன்ற கூர்த்த அறிவு இருந்தது. அவர் ஒரு மிகச்சிறந்த தருக்கவாதி என்பதிலோ, கல்விமான் என்பதிலோ, வாதம் செய்வதில் வல்லவர் என்பதிலோ ஐயமேதும் இல்லை. ஆனால் அவருக்குப் பெருந்தன்மை இருக்கவில்லை. அவருடைய இதயமும் அப்படிப் பட்டதாகத்தான் இருந்திருக்கும் போலத் தோன்றுகிறது. அத்தோடு, அவர் தான் பிராமணன் என்பதைப் பற்றியும் மிகவும் பெருமை பீற்றிக் கொண்டு இருந்திருக்கிறார் - பார்ப்பனர்களைப் போன்று மிக்க கர்வம் கொண்டவராக இருந்தார் என்று சொல்லலாம்.*

-(விவேகானந்தர் நூல் தொகுப்பு 7 பக் 116.)

படிப்பகம்

www.padippakam.com



# பரிந்துரை இல்லாமல், இ.ஆ.ப. (அய்.எ.எஸ்.) ஆகுங்கள்!

- வேகான

அரசியல் அமைப்புச் சட்டப்படிதான் நாடாளுமன்றம், சட்டமன்றம், நீதிமன்றம், அரசுப் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், இரயில்வே சர்வீஸ் கமிஷன், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்றவை செயல்படுகின்றன. இவைகளுக்குச் சம அதிகாரம் - ஓர் படியாள் போன்று உண்டு. அரசாங்கமே எல்லாவற்றுக்கும் மேல் அதிகாரமுடையது என்பது ஒரு மாயை. கிராமப்புறப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பட்டதாரி வகுப்புகளைச் சேர்ந்த வேலை தேடுவோர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். உட்பட, பல்வேறு உயர் பதவிகளுக்கு ஆண்டுதோறும் 600, 700 அதிகாரி களைக் குடிமைப்பணித் தேர்வின் மூலம் (Civil Services Exams) தேர்ந்தெடுக்கின்றனர்.

இப்பணிகளுக்கு விண்ணப்பிக்கவும், நூல்களை வாங்கவும் என்று பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகுமே - அது நம்மால் முடியுமா என்று கிராமப்புறப் பட்டதாரிகள் பலர் நம்புகின்றார்கள். இது உண்மையன்று.

தமிழ்நாடு அரசால் குடிமைப் பணித் தேர்வுகளுக் கென்றே (Civil Services Exams) இலவசப் பயிற்சி நிலையம் சென்னையில் நடத்தப்படுகின்றது. அதன் முகவரி: அகில இந்தியக் குடிமைப்பணி தேர்வுப் பயிற்சி மையம், 225, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 600 040. தொலைபேசி: 6211475 / 6211909.

2000ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குடிமைப் பணித் தேர்வு முடிவு, 16.05.2001இல் நாளேடுகளில் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து 30 பேர் இப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதில் 23 பேர் சென்னை, அண்ணா நகரில் உள்ள மேற்படி அரசு இலவசப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவார்கள். இம்மையத்தில் மிகச் சிறந்த நூல் நிலையம் உள்ளது. ஒரே வளாகத்தில் மாணவர் விடுதி, உணவு விடுதி, வகுப்பறைகள், நூல் நிலையம் என்று உள்ளதால் மாணவர்கள் கவனம் சிதறாமல் நன்கு படிக்க முடிகின்றது.

மேலும் கம்ப்யூட்டர், இன்டர்நெட் போன்ற வசதிகளும் உண்டு. அத்துடன் மிகச் சிறந்த பேராசிரியர்கள் ஒவ்வொரு பாடத்துக்கும் இங்குப் பயிற்சியும் பாடமும் நடத்துவதால் இங்குப் பயிலும் மாணவர்கள் அதிக அளவில் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.

இவ்வளவு வசதியும் இலவசமே. ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மட்டும் மாணவர் உணவு விடுதிக்குப் பணம் (மாதம் ரூ.700க்குள்) கட்ட வேண்டும். மற்றபடி அனைவர்க்கும் பயிற்சி, தங்கும் விடுதி, உணவு இலவசமே.

இப்பயிற்சி மையத்தில் சேர்க்கைக்கான தமிழக அரசின் விளம்பரம், ஆண்டுதோறும் சூலை - ஆகஸ்டில், நாளேடுகளில் வெளியிடப்படும். இப்பயிற்சி மையத்தில் சேருவதற்கென்றே ஒரு நுழைவுத் தேர்வு ஆண்டுதோறும் நவம்பரில் நடைபெறும். இது அய்.ஏ.எஸ். தேர்வைப் போன்றே கடினமாகத் தான் இருக்கும். பொது அறிவில் ஒரே ஒரு தாளில்தான் தேர்வு. இதில் அதிக மதிப்பெண்கள் பெற்ற அடிப்படையிலும், வகுப்புவாரி இடஒதுக்கீடு களுக்கேற்பவும், நேர்முகத் தேர்வு டிசம்பரில் நடத்தப்பட்டு, மாணவர்கள் பயிற்சிக்குத் தேர்ந் தெடுக்கப்படுகின்றார்கள். டிசம்பர் 20 ஆம் நாளிலிருந்து பயிற்சி ஆரம்பிக்கும். தாழ்த்தப்பட்டவர் களுக்கு 100, பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பு 90, முற்பட்ட வகுப்பு 10 இடங்கள்.

இதில் சேர விரும்புவோர் விளம்பரத்திற்காகக் காத்திராமல் இப்போதிருந்தே உங்களை ஆயத்தம் செய்து கொள்ளலாம்.

NCERT (National Council for Education Research and

படிப்பகம்

www.padippakam.com



Training) நிறுவனமானது, +1, +2 மாணவர்களுக் கென்று வெளியீடு செய்து விற்கும் வரலாறு, நிலவியல், கணக்கு, பொருளியல் மற்றும் அனைத்து அறிவியல் பாட நூல்களையும் விலைக்கு வாங்கிப் படிக்கவும். இந்நூல்களின் விலை மிகக் குறைவுதான்.

இத்துடன் மத்திய அரசு வெளியிடும் "INDIA - An Annual Reference", "Economic Survey" ஆகிய இரு நூல்களையும் வாங்கிப் படிக்கவும். நாள்தோறும் ஆங்கிலச் செய்தியேடு, தமிழ்ச் செய்தியேடு படித்து முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை வெட்டிப் பாதுகாத்துக் கொள்க.

ஒவ்வோராண்டும் டிசம்பரில் வெளியாகும் "The Employment News' வாராந்தர ஏட்டில் குடிமைப் பணித் தேர்வு பற்றிய நூல்கள் அனைத்தையும் - பாடத் திட்டம், மாணவர் உடல் தகுதி, கல்வித் தகுதி, வயது, தேர்வு முறைகள், தேர்வு நாள்கள் - வெளியிடப்படு கின்றது.

தற்போது ஏதேனும் ஒரு பல்கலைப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். தாழ்த்தப்பட்டோ ருக்கு 35 வயது, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) 32 வயது, மற்ற அனைவருக்கும் 30 என அதிகபட்ச வயது வரம்பாக உள்ளது.

இவ்விளம்பரம் வந்த ஒரு மாதத்திற்குள் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு விண்ணப்பிக்க வேண்டும். தேர்வு பின்வரும் மூன்று நிலைகளை உடையது. 1. Preliminary Exams. 1. General Studies, 2. Any one Subject at degree level. வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே இருக்கும். பல விடைகளிலிருந்து சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் முறையில் (Multiple Choice Questions) விடையளிக்க வேண்டும்.

எனவே இங்கு மொழிச்சிக்கல் ஏதுமில்லை.

மே மாதத்தில் தேர்வு.

**2. Main Examination.**

இதில் மொத்தம் ஒன்பது தாள்கள் உண்டு.

> **இதுதான் பார்ப்பனியம்**
>
> தீண்டாமை சாதியை அடிப்படையாய்க் கொண்டது. சாதி வர்ண தர்மத்தை அடிப்படையாய்க் கொண்டது. வர்ணாசிரமத்தின் அடிப்படை பார்ப்பனியம்; பார்ப்பனியமோ இந்திய அரசியல் சமூகத் துறைகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் ஓர் இயங்கு சக்தியாக உள்ளது.
>
> - அம்பேத்கர்

விரிவான முறையில் விடையளிக்க வேண்டும். Choice மிகக் குறைவு. இதன் விவரம்:

| தாள் | பாடம் | மதிப்பெண் |
|---|---|---|
| I | தமிழ் உட்பட ஏதேனும் ஓர் இந்திய மொழி | 300 |
| II | ஆங்கிலம் | 300 |
| III | கட்டுரை | 200 |
| IV & V | பொதுப்பாடம் (General Studies) | 300 + 300 |
| VI & VII | ஏதேனும் பட்ட வகுப்பில் உள்ள ஒரு பாடம் (Subject) | 300 + 300 |
| VIII & IX | ஏதேனும் மற்றொரு பட்ட வகுப்புப் பாடம் | 300 + 300 |

இதில், ஆங்கிலம் தவிர மற்ற அனைத்துத் தேர்வுகளையும் தமிழிலேயே எழுதலாம் என்பது கிராமப்புற மாணவர்களுக்கு உள்ள மிகப் பெரிய வாய்ப்பு. தமிழையும் ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு, தமிழ் மொழி வழியிலேயே எல்லாப் பாடங்களிலும் தேர்வெழுதிய பல மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நவம்பரில் சென்னையில் தேர்வு நடைபெறும்.

3. நேர்முகத் தேர்வு: 300 மதிப்பெண். டெல்லியில் ஏப்ரல்/ மே மாதத்தில் நடைபெறும். வருவாய் குறைந்த பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வகுப்பு (அண்ணா நகரில் உள்ள பயிற்சி மையம் மூலம் சென்றால்) டெல்லிக்குச் சென்று வந்த பிறகு, இரயில் கட்டணத்தை இப்பயிற்சி மையமே கொடுத்து விடும். (Reimbursement). டெல்லியில் இலவசமாகத் தங்கவும்/ உணவுக்கும் இந்நிறுவனம் ஏற்பாடு செய்து தருகின்றது. எண் வரிசைப்படி கடைசி மாணவருக்கு நேர்முகத் தேர்வு முடிந்தவுடன், 3, 4 நாட்களிலேயே, இறுதித் தேர்வு முடிவு தெரிந்து விடும்.

பிறகு என்ன? பரிந்துரை செய்ய யாருமில்லையே என்று ஏக்கத்துடன் சோம்பிக் கிடக்காமல் கிராமப்புற மாணவ - மாணவிகள் தமிழ்நாடு அரசு தரும் இந்த இலவசப் பயிற்சியில் சேர்ந்து அய்.ஏ.எஸ். அதிகாரியாக, வேலை பெற - இன்றே, இப்பொழுதே ஆயத்தமாகுங்கள். உங்கள் அறிவுக்கும் திறமைக்கும் இது ஓர் அறைகூவல் ஆகும். ●

படிப்பகம்

www.padippakam.com



# பாட்னாவை அடுத்த பூலியா தோலாவில் வே. ஆனைமுத்து தலைமையில் சுயமரியாதைத் திருமணம்



அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் குலத்தினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவையின் தலைவரும், இந்திய மக்களவை- நாடாளுமன்ற மேலவை முன்னாள் உறுப்பினருமான தோழர் இராம் அவதேஷ் சிங் - ஷியாமா தேவி ஆகியோரின் மூன்றாவது மகன் டாக்டர் கஷ்மீர் அலி; பூலியா தோலாவைச் சார்ந்த தோழர் ஷியாம் நந்தன் ராய் - சாமாதேவி ஆகியோரின் இளைய மகள் டாக்டர் பிங்கி குமாரி ராய் ஆகிய மண மக்களுக்கு, 1-5-2001 செவ்வாய் இரவு 10 மணிக்கு, பூலியா தோலாவில் திருமண மண்டபத்தில் சுயமரியாதை முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் புரவலரும், மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் அமைப்புச் செயலாளருமான வே.ஆனைமுத்து தலைமையேற்று, சுய மரியாதைத் திருமணத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார். சீர்காழி மா. முத்துச்சாமி, சென்னை சி.பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மணமகனின் தந்தையார் இராம் அவதேஷ் சிங் திருமணத்திற்கு ஒப்புதல் வழங்கி, அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவரை அடுத்து மணமகளின் தந்தையார் ஒப்புதல் அளித்து உரையாற்றினார்.

பின்னர் உத்தரப் பிரதேசத்தில் செயல்படுகிற அர்ஜக் சங்கத்தின் களப்பணியாளர்களுள் ஒருவரான லட்சுமண் சிங் இந்தியில் அச்சிடப்பட்டிருந்த வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியை மணமக்கள் படிக்கச் செய்து மாலை மாற்றிக் கொள்ளச் செய்து, வாழ்க்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார்.

போஜ்புரியா மற்றும் சில தோழர்கள் மண மக்களுக்கு அறிவுரை வழங்கிப் பேசினர். நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் லோகியா சோசலிசவாதிகள், ஆடவர், மகளிர் உட்பட ஓராயிரவர் கூடியிருந்தனர்.

மணமகனுக்கு வே. ஆனைமுத்து தங்க மோதிரம் அணிவித்தார். தமிழக விருந்தினர்கட்கு மண வீட்டார் புத்தாடைகள் வழங்கி மகிழ்ந்தனர். இரவு 11-30 மணிக்கு அனைவரும் விருந்துண்டனர்.

வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கு பெற வந்த அனைவரும் இரவு 8 மணிக்கு தானாப்பூர் ஊர் பொதுத் திடலில் கூடி அமர்ந்திருந்தனர். மணமகன் கஷ்மீர் அலி அங்கு வந்து அனைவருக்கும் வணக்கம் தெரிவித்த பின்னர், விருந்தினர் புடைசூழ, மணமகன் ஒளி உமிழும் ஊர்தியில் அமர்த்தப்பட்டு, 2 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள பூலியா தோலாவுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். திருமண மண்டபத்தில் அமர்ந்தவுடன் அனைவர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

அர்ஜக் சங்கம் என்பது தந்தை பெரியாரோடு தொடர்புடையவரும், சிறந்த சுயமரியாதைக் காரரும், உ.பி. முன்னாள் அமைச்சருமான இராம் ஸ்வரூப் வர்மா என்பவரால் நிறுவப்பட்ட புரோகித ஒழிப்புச் சங்கமாகும். 1982 பிப்ரவரியில் இச்சங்கத்திற்கு வே. ஆனைமுத்துவை அழைத்து அவர் பேச வைத்தார். 1998 இல் அவர் மறைவுற்றாரெனினும், அவருடைய சங்கத்தின் புரோகித ஒழிப்புப் பணி தொடர்ந்து நடைபெறுவது பாராட்டுக்குரியது.

**செய்தி: மா.முத்துச்சாமி**

படிப்பகம்

www.padippakam.com



## நூல் அறிமுகம்

### 'கவிஞர் போற்றும் சுரதா'

விலை ரூ.50, தொகுப்பாசிரியர்: புலமைதாசன், புலமைப் பதிப்பகம், 10, பார்த்தசாரதி சாமி சந்து, திருவல்லிக்கேணி, சென்னை-5.

இந்நூலின் தொகுப்பாசிரியர் பெரியார், அம்பேத்கர், பாரதிதாசன் போன்றோர்க்கு ஏற்கெனவே இதுபோன்ற தொகுப்பு நூல்கள் வழங்கியுள்ளார். அந்தத் தன்மையில் நாம் வாழும் காலத்தின் சிறந்த பாவலராகிய சுரதா பற்றிப் பல்வேறு கவிஞர்கள் படைத்துள்ள கவிதைகளின் தொகுப்பு நூல் இது.

### மொழி மானம்

ஆசிரியர்: பேராசிரியர் ம.இலெ.தங்கப்பா, விலை ரூ.50

எங்கும் எதிலும் தமிழே வேண்டும். தமிழனின் அரசியல் தமிழ் மக்களின் நலம் கருதுவதாக நடைபெறல் வேண்டும். தமிழர் பிறரின் பொருளியல் சுரண்டலுக்கு ஆட்படாதிருத்தல் வேண்டும். தமிழரின் பண்பாடு அயன்மைக் கூறுகளைப் புறந்தள்ளி மண்ணின் மணங்கமழும் சொந்தப் பண்பாடாகத் திகழ்தல் வேண்டும். இப்படி... இப்படியாய்த் தமிழ், தமிழர் நலமெண்ணி நாளும் செயல்பட்டு வரும் பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா பல்வேறு சூழல்களில் எழுதிய கட்டுரைகளின் அரிய தொகுப்பு நூல்.

### புயற்பாட்டு

ஆசிரியர்: பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா, விலை ரூ.25

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'பரணி'யும் ஒன்று. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி அவற்றுள் புகழ் பெற்றது. இந்நூலும் ஒரு பரணிதான். ஆனால் போர்ப் பரணியன்று. புயற் பரணி. முனைவர் இரா. திருமுருகன் இந்நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் இப்படிக் குறிப்பிடுகிறார்: தங்கப்பா படைத்தது புயற்பாட்டுத்தான். ஆனால் அது படிப்பார் உள்ளத்தில் தென்றல் காற்றாக உலவுகிறது. வறியோர் வாழ்க்கையின் அவலங்கள், அழகிய கற்பனை, இயற்கைப் புனைவு, இலக்கிய இன்பம், நல்ல தமிழ் நடை, இனிய சந்தச் சுவை ஆகியவற்றை ஒருசேரச் சுவைக்க வாய்த்த அருமையான இலக்கியம் புறப்பாட்டு. இலக்கியச் சுவைஞர்க்கு வாய்த்த இனிய அறுசுவை விருந்து.

இரு நூல்களும் கிடைக்குமிடம்: வானகப் பதிப்பகம், 7, 11வது குறுக்கு, அவ்வை நகர், புதுச்சேரி - 605 008.

### 'காவிரி: தமிழகம் இழந்து வரும் வரலாறு - முதற்கட்டம்''

வெளியீடு: காவிரி காப்புக் குழு கரூர் - 639 001
விலை: ரூ.15

பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் ஆங்கிலக் கட்டுரை ஒன்றிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நூல். காவிரிச் சிக்கல் பற்றிய வரலாறு அறிய விரும்புவோர்க்குத் தமிழ்நாடு - மைசூர் (கர்நாடகம்) இடையே 1892 மற்றும் 1924ல் ஏற்பட்ட ஒப்பந்தங்களும் அவற்றின் நிறைகுறைகளும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

உலக நாடுகளிடையே நதிநீர்ப் பங்கீடு தொடர்பான ஒப்பந்தங்களின் தன்மை, அவற்றின் செயல்பாடுகள் யாவும் தெளிவாக்கப்படுகின்றன. தனித்தனி நாடுகள் இடையே நதிநீர்ப் பங்கீடு எளிதாகத் தீர்க்கப்படும்போது இந்தியாவில் - ஒரே நாட்டெல்லைக்குள் ஓடும் ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வதில் தீராத சிக்கல் ஏற்பட்டுள்ளது பற்றியும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. ''இந்தியத் துய்ப்புரிமைச் சட்டத்தின் அடிப்படையில் காவிரி நீர்ப் பங்கீட்டை முறைப்படுத்தலாம்'' எனும் ஆலோசனை புதுமையானது.

- நாஞ்சில்

**வாலாசாப்பேட்டையில் மேநாள் விழா**
**டாக்டர் அம்பேத்கர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்**
**111 ஆவது பிறந்த நாள் விழா**

வாலாசாப்பேட்டை பேருந்து நிலையத்தில் 1.5.2001 மாலை 6 மணியளவில் மே நாள் விழா, டாக்டர் அம்பேத்கர், புரட்சிகவிஞர் பாரதிதாசன் ஆகியோரது 111ஆவது பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசயகுமார் தலைமை தாங்கினார். ச.யோகநாதன், தி.து.சக்கரவர்த்தி, ச.ந.ச. மார்த்தாண்டன், குமரத் தன்னொளியன், வாலாசா வல்லவன் ஆகிய தோழர்கள் உரையாற்றினர். தமிழ் தமிழர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு சிறப்புரையாற்றினார். காஞ்சி விடியல் குழுவினரின் 'இதோ வாராங்க' என்ற தலைப்பில் தேர்தல் புறக்கணிப்பு ஏன் என்பதை விளக்கும் நாடகம் நடைபெற்றது. சி. இராமலிங்கம் நன்றி கூறலுடன் விழா இனிதே முடிவுற்றது.

படிப்பகம்

www.padippakam.com



## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

**சோ. பூங்கோதை - த. சத்திய நாராயணன்**

மேல்விசாரம் அப்துல் அகீம் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் இரா.சோதிவாணன் மகள் சோ.பூங்கோதை - த. சத்தியநாராயணன் ஆகியோர் திருமணம் 4.5.2001 அன்று ஆர்க்காடு கம்சலா திருமண மண்டபத்தில் பேராசிரியர் பெரியார்தாசன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் இரவு பேராசிரியர் இரா.கணேசன் தலைமையில் புலவர் கோ.சாரங்கபாணியை நடுவராய்க் கொண்டு 'குடும்ப வாழ்விற்கேற்ற திரைப்பாட்டு வழங்கியவரில் விஞ்சியவர் கண்ணதாசனா? வைரமுத்துவா?' எனும் தலைப்பிலான பட்டிமன்றமும் நடந்தது. வேலூர் உதவும் உள்ளங்கள் தலைவர் இரா. சந்திரசேகரன் நன்றி கூறினார்.

**சி.சாந்தி - சு.திருமுருகன்**

பெரியாக் குறிச்சி வி.சுவர்ணலிங்கம் - மனோன்மணி ஆகியோர் மகன் திருமுருகன் - கோவில்பாளையம் சோ.சிதம்பரம் - இந்திராணி ஆகியோர் மகள் சாந்தி ஆகியோர்தம் திருமணம் வே.ஆனைமுத்து தலைமையில் மருத்துவர் பெ.இளங்கோவன் முன்னிலையில் 13.5.2001 அன்று காலை அரியலூர் ஆர்.டி.சி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது

மணமகளின் தந்தை சோ.சிதம்பரம் வரவேற்புரை நிகழ்த்தினார். பொன் இராசமாணிக்கம், க.மாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சி.முருகானந்தம் நன்றியுரைத்தார். திருமண மகிழ்வாக மணமக்களின் இருவீட்டுப் பெற்றோரும் 'சிந்தனையாளன்' வாழ்நாள் கட்டணம் தனித்தனியே ரூபாய் 1000/- அளித்தனர்.

★ இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே ஆகும்.

★ எல்லா விமரிசனங்களிலும் தலையாய விமரிசனம் மதத்தைப் பற்றிய விமரிசனமே!

- காரல் மார்க்ஸ்.

## கவிஞர் தமிழேந்திக்குப் பாவேந்தர் மரபுப் புலவர் விருது



புதுவை அரசும் பாவேந்தர் பாசறையும் இணைந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 111 ஆவது பிறந்த நாள் விழாவினை 29.4.2001 அன்று புதுவை பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் ஆய்வு மையத்தில் சிறப்பாகக் கொண்டாடின. இவ்விழாவில் கவிஞர் தமிழேந்திக்குப் 'பாவேந்தர் மரபுப் பாவலர்' விருதும் பரிசுத் தொகை ரூபாய் ஓராயிரமும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. இதேபோல் பாவேந்தர் பற்றிச் சிறந்த நூல் (பாரதிதாசனோடு பத்தாண்டுகள்) எழுதியமைக்கான பரிசு கவிஞர் ஈரோடு தமிழன்பன், 'கவிஞர் தேவிதாசனார் விருது', கவிஞர் நா.நந்தகோபால் ஆகியோர்க்கும் வழங்கப்பட்டன.

பாவேந்தர் புகழ் பரப்பும் பணிக்கான பட்டயங்கள் பேராசிரியர் ம.இலெ.தங்கப்பா, கவிஞர் கண்ணிமை, திருமழபாடி. முனைவர் அ. ஆறுமுகம் உள்ளிட்ட சான்றோர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் சு.முத்துக்குமரன், பாவேந்தரின் மகன் மன்னர் மன்னன், முகம் மாமணி, முனைவர் இளமாறன், புலவர் கி.த.பச்சையப்பன், புதுவை தமிழமல்லன் முதலானவர்கள் பங்கேற்றனர். விழா தொடங்குமுன் காலை 9 மணியளவில் புதுவைப் பாரதி பூங்காவில் அமைந்துள்ள பாவேந்தர் சிலைக்கு மாலை அணிவிக்கப் பெற்று அங்கிருந்து புறப்பட்ட எழுச்சி ஊர்வலம் 10 மணியளவில் பாவேந்தர் நினைவு அருங்காட்சியகத்தை அடைந்தது.

படிப்பகம்

www.padippakam.com





## கோவையில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழா

தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் சார்பாக 1.5.2001 அன்று கோவையில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழா, சுயமரியாதை இயக்கக் குடும்ப விழா, மூத்த பெரியார் தொண்டர்களுக்குப் பாராட்டு விழா, கலப்பு மணம் செய்தவர்களுக்குப் பட்டயம் வழங்கும் விழா, கருஞ்சட்டைப் பேரணி ஆகியவை சிறப்பான முறையில் நடைபெற்றன.

சுயமரியாதை இயக்கக் குடும்ப விழாவிற்குப் பேரா. சக்குபாய் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

மாலையில் கோவை செஞ்சிலுவைச் சங்கம் அருகிலிருந்து கருஞ்சிறுத்தைகள் பேரணி வெ.ஆறுச்சாமி தலைமையில் புறப்பட்டது. 6 மணியளவில் கோவை காந்திபுரம் சந்திப்பில் பெரியார் சிலை திறப்பு விழா நடைபெற்றது.

கு.இராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். நா.அருணாசலம் மூத்த பெரியார் தொண்டர்களுக்கு விருது வழங்கினார். பெரியார்தாசன் சாதி மறுப்பு மணம் செய்தவர்களுக்குப் பட்டயம் வழங்கினார். திருவாரூர் கே. தங்கராசு, திருச்சி நீ. செல்வேந்திரன், மு. இராமநாதன், இரா.மோகன், செ.துரைசாமி, கே.ஜி. கஸ்தூரி ரங்கன், ஆனூர் ஜெகதீசன், கொளத்தூர் த.செ. மணி, ஆ.நெடுஞ்செழியன், சங்கமித்ரா, கனல் மைந்தன் தஞ்சை இரா. இரத்தினகிரி, செந்தலை ந. கவுதமன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பொள்ளாச்சி இரா. மனோகரன் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

**சிந்தனையாளன் சந்தா செலுத்தி விட்டீர்களா?**

## பேராசிரியர் சாலை - சாலினியார் நினைவேந்தல் நிகழ்ச்சி

## தமிழ் ஆட்சிமொழி - செவ்வியல் மொழி கருத்தரங்கம்

5.5.2001 அன்று மாலை சென்னை பாவாணர் நூலக அரங்கில் புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் நடந்த இந்நினைவேந்தல் நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் ச.பார்த்தசாரதி, இ.மறைமலை, புலவர் ப.சாத்தன், பூவை இளந்திரையன், மு.இராமச்சந்திரன், குடந்தை கீதாலயன், அ.சி. சின்னப்பாத் தமிழர் முதலானோர் உரை நிகழ்த்தினர்.

இரண்டாம் அமர்வாகக் குடந்தை வை.மு. கும்பலிங்கன் தலைமையில் தமிழ் செவ்வியல் மொழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. வழக்கறிஞர் கோவி ராமலிங்கம் மருத்துவர் டொமினிக் சாமிநாதன், அறிஞர் மணவை முஸ்தபா ஆகியோர் உரையாற்றினர். இடைநிகழ்வாக மாணவர்கள் பங்கேற்ற சாலையாரின் உரைவீச்சு முழக்கமும் நடைபெற்றது.

இறுதியில் புலவர் த.சுந்தரராசன் அறிமுக உரையாற்ற, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் குடந்தை வை.மு.கும்பலிங்கனின் தமிழியத் தொண்டைப் பாராட்டி அவருக்குத் 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் பட்டமும் சால்வையும் அளித்துப் பாராட்டுரை வழங்கினார். விழாவிற்கு வந்திருந்தோரைக் கோ.அழகிய நம்பி வரவேற்க, கும்பலிங்கன் ஏற்புரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார்.

---

### பொறியாளர் ப.தண்டபாணி இயற்றிய 'தமிழ்க் கீர்த்தனைகள்' நூல் வெளியீட்டு விழா

இசைமாமணி பொறியாளர் ப. தண்டபாணி இயற்றிய 'தமிழ்க் கீர்த்தனைகள்' என்னும் தமிழ் இசைப் பாடல்கள் நூல் வெளியீடு மற்றும் படத் திறப்பு விழா 28.4.2001 அன்று மாலை திருவல்லிக்கேணி மகாகவி பாரதியார் நினைவில்லக் கூட்ட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. கலைமாமணி டாக்டர் திருப்பாம்பரம் கோ.சண்முக சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ச.அ.டேவிட், கே.எம். கருப்பய்யா ஆகிய தோழர்கள் உரையாற்றினர். ஆபிரகாம் பண்டிதர் மன்றச் செயலாளர் ஜெ.செயராமன் வரவேற்றார். பதிப்பாசிரியர் செ.நடராசன் நன்றி கூறினார்.

www.padippakam.com



வரலாற்றுச் சுவடுகள்

# ஈரோட்டில் 'குடிஅரசு' பத்திரிகாலயத் திறப்பு விழா

18.4.1925 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்குத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மேற்படி பத்திரிகாலயத்தைத் திறந்து வைத்தார். ஸ்ரீமான் ஈ.வி. இராமசாமி நாயக்கரவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளைப் பத்திரிகாலயத்தைத் திறந்து வைக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகையில், தானும் ஸ்ரீமான் தங்கப் பெருமாள் பிள்ளையவர்களும் மேற்படி பத்திரிகை ஆரம்பிக்கும் விஷயமாய் அதிக நாள் யோசித்து முடிவு செய்ததாகவும், அதன் அவசியத்தையும் காரணத்தையும் கூறினார். பின்னர் ஸ்ரீ சுவாமிகள் பத்திரிகைகளின் அவசியங்களையும், அதனால் ஜனங்களுக்குண்டாகும் உணர்ச்சியையும் சொல்லி விட்டு, பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம்; முதலியவற்றிற்கு முக்கிய உபயோகமாயிருப்பது பத்திரிகைகள் தானென்றும், ஸ்ரீமான் நாயக்கரவர்கள் ஆரம்பிக்கும் 'குடி அரசு' என்னும் பத்திரிகையானது தனது பெயருக்கேற்ப கருத்துக்களை வெளியிட்டு உண்மையான தொண்டு செய்யுமென்றும் அதன் பயனைப் பொது ஜனங்கள் அடைய வேண்டுமென்றும் இப்பத்திரிகையானது நீடூழி வாழ்ந்து செழித்தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென்றும் கூறி முடித்தார்.

**- தெ. சாரநாதன்**

('நாடார்குல மித்திரன்', 4 .5.1925, பக்.3)


'நல்ல நூல்கள் நம் வாழ்வின் நண்பர்கள்'

**வடபழனியில்**

**ஒரு**

**புதிய புத்தகச் சந்தை**

**தமிழ் முழக்கம்**

(குறுந்தகடு, ஒலிநாடா, நூல்கள் விற்பனையகம்)

**எங்களிடம்**

**தமிழ்த் தேசியம், பெண்ணியம், பெரியாரியம், மார்க்சியம், தலித்தியம் தொடர்பான நூல்களும், மற்றும் பொதுவான அனைத்து நூல்களும் கிடைக்கும்**

முகவரி: 2/66, நூறடிச் சாலை, வடபழனி

சென்னை - 600 026.

வேலை நேரம்: காலை 10 முதல் இரவு 7 மணி வரை

(உணவு இடைவேளை மதியம் 1 மணி முதல் 2 மணி வரை)

ஞாயிறு விடுமுறை

நூல்களை வாங்கிப் பயன் பெறுங்கள்!


படிப்பகம்

www.padippakam.com



# சோதிடம் ஒரு விஞ்ஞானமா? திறந்த மனதுடன் ஒரு பார்வை

- இராமியா



பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவர் கௌதம் ஜோதிடத்தை ஒரு விஞ்ஞானமாகப் பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிப்பதை ஆதரித்துப் பேசியிருக்கிறார். இந்தியாவிலுள்ள விஞ்ஞானிகள் பலர் இதை எதிர்த்துப் போர்க் கொடியை உயர்த்தியுள்ளனர். ஆனால் ஜோதிடத்தை ஆதரிப்பவர்கள் இப்பிரச்சினையில் பிடிவாதத்தைக் கடைப்பிடிக்காமல் திறந்த மனதுடன் அணுகும்படிக் கூறுகிறார்கள்.

ஜோதிடத்தைத் தெரிந்து கொண்டவன் என்ற முறையில், சில விவரங்களை யாருமே அலசிப் பார்க்க மறுப்பதைக் கண்டு வியப்படைகிறேன். ஒருவனுடைய ஜாதகத்தைக் கொண்டு அவனுடைய குணநலன்கள் அவனுடைய வாழ்நாளில் நடக்கும் விஷயங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியும் என்று ஜோதிடம் உறுதி கூறுகிறது.

ஜாதகம் என்பது பிறந்த நேரத்தை வைத்துக் கணிக்கப்படுகிறது. ஒருவன் பிறந்த நேரத்தில் கிரகங்கள் எங்கெங்கு இருந்தது என்பதைக் குறித்துத் தருவதே ஜாதகம் எனப்படுகிறது. இராசிக் கட்டத்தில் இந்தக் கிரகங்கள் சுற்றிக் கொண்டே இருக்கின்றன. இவற்றுள் மிக வேகமாக சுற்றக் கூடிய கிரகம் (?) சந்திரன் ஆகும். இது ஒரு இராசிக் கட்டத்திலிருந்து இன்னொரு இராசிக் கட்டத்திற்குப் போக 2¼ நாட்கள் ஆகிறது. ஆகவே 2¼ நாட்கள் வரை இராசிக் கட்டங்களில் கிரகங்களின் நிலை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். எது எப்படி இருப்பினும் இரண்டு மணி நேரத்திற்கு இராசிக் கட்டங்களில் கிரகங்களின் நிலையில் மாற்றம் ஏற்படுவது அதிகமாக இராது. இந்த இரண்டு மணி நேரத்தை 'லக்னம்' என்று அழைக்கிறார்கள். அதாவது இரண்டு மணி நேரத்தில் 'லக்னம்' ஒரு இராசியிலிருந்து இன்னொரு ராசிக்குச் செல்கிறது.

இதை மனதில் வைத்துக் கொண்டு சில விஷயங்களைப் பரிசீலிக்க வேண்டும். இந்தியாவில் ஒரு வினாடிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இரண்டு மணி நேரத்தில் 7,200 குழந்தைகள் பிறக்கின்றன. பெரும்பாலும் இரண்டு மணி நேர இடைவெளியில் பிறக்கும் குழந்தைகளின் ஜாதக அமைப்பு ஒரேமாதிரியாகத்தான் இருக்கும்.

இந்த 7,200 நபர்கள் சமுதாயத்தின் பல நிலைகளில் இருப்பவர்கள். இவர்களின் பார்ப்பனர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் முதலியவர்கள் உண்டு. சுருங்கக் கூறினால் சமூகத்தின் பல நிலைகளில் உள்ள மக்கள் அவர்களுடைய தொகையின் விகிதாசாரத்தில் ஒரே அமைப்பிலுள்ள ஜாதகத்திற்கு உரியவர்களாக இருப்பார்கள்.

ஜோதிடத்தை ஆதரிப்பவர்கள், ஜாதகம் தான் ஒருவருடைய குண நலன்களை, வாழ்க்கை நிலைகளை நிர்ணயிக்கிறது என்று கூறுகிறார்கள்.

**இது சரியென்றால், ஒரே ஜாதக அமைப்பைக் கொண்டவர்கள், அவர்கள் சமூகத்தின் எந்தப் பிரிவைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கை முறை ஒரே மாதிரியாக அல்லவா இருக்க வேண்டும்? ஆனால் உண்மை அதற்கு மாறாக இருக்கிறதே? முற்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு வாழ்க்கை நிலைகளில் உயர்ந்து இருக்கும் போது, அதே ஜாதக அமைப்புக்குச் சொந்தக்காரர்களான மற்றவர்களால் மேலே எழ முடியவில்லையே? ஏன்?**

ஜாதகம் தான் அனைத்தையும் நிர்ணயிக்கிறது என்றால் இந்த வேறுபாட்டிற்கு விளக்கம் என்ன? இப்பிரச்சினையைக் குறித்து ஜோதிடவாதிகள் ஏன் ஆராய்வதில்லை? இப்பிரச்சினைகளைக் குறித்து விமர்சனக் கண்ணாட்டத்துடன் ஆராயாமல் ஜோதிடம் விஞ்ஞானமே என்று ஒரேயடியாக அடித்துக் கூறுவதில் என்ன பயன்? விஞ்ஞானம் எதையும் அடித்துக் கூறி வம்பு செய்யாது. அது எப்போதும் காரணங்களை அறிவுப்பூர்வமாகவே ஆராயும்.

படிப்பகம்

www.padippakam.com



# மயிலாடுதுறை நகராட்சி தியாகி ஜி.நாராயணசாமி மேனிலைப் பள்ளி



**9.6.2001 சனிக்கிழமை**
**மாயவரம் நடராசன் நினைவு அரங்கம்**
**சுயமரியாதை மாநாடு**

*காலை 8.30 மணி காஞ்சி கலைக்குழு இன்னிசை*
*காலை 10.00 மணி முதல் 1.30 மணி வரை*
*சுயமரியாதை மாநாடு*
*தலைமை:* **வே.ஆனைமுத்து**

**உரைவீச்சு**

**'இயக்கத்தின் சாதனைகளும் சோதனைகளும்'**

| | | |
|---|---|---|
| பார்ப்பன ஒழிப்பில் | : | அரங்க. குணசேகரன் |
| சாதி.ஒழிப்பில் | : | முனைவர் க.நெடுஞ்செழியன் |
| கடவுள் மத எதிர்ப்பில் | : | குப்பு. வீரமணி |
| கலை பண்பாட்டில் | : | கவிஞர் அறிவுமதி |
| மகளிர் முன்னேற்றத்தில் | : | முனைவர் சக்குபாய் |

**பிற்பகல் 3.30 முதல் 6.30 மணி வரை**
**சமூக நீதி அரங்கம்**

| | | |
|---|---|---|
| தலைமை | : | பேரா. சரசுவதி |

**உரைவீச்சு**

| | | |
|---|---|---|
| கல்விப் பணியில் | : | இரா. இரத்தினகிரி |
| அரசுப் பணிகளில் | : | சங்கமித்ரா |
| தனியார்த் துறைகளில் | : | மருத்துவர் விமனாமூர்த்தி |
| நீதித் துறையில் | : | வழக்கறிஞர் அஜிதா |
| பெண்ணியத்தில் | : | முனைவர் மு. வளர்மதி |

**10.6.2001 ஞாயிற்றுக்கிழமை**
**சுவர் எழுத்து சுப்பையா அரங்கம்**
**சமதர்ம மாநாடு**

*காலை 9.00 மணி காஞ்சி கலைக்குழு இன்னிசை*
*காலை 10.00 மணி*
*தலைமை :* **பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**

**உரைவீச்சு**

**வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு**

| | | |
|---|---|---|
| வேளாண்மைத் தொழிலில் | : | து.தில்லைவனம் |
| புதிய பொருளாதாரத்தில் | : | பேரா.மு.க.சுப்பிரமணியன் |
| மின்துறை மற்றும் வேலைவாய்ப்பில் | : | பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன் |
| தமிழ்வழிக் கல்வியில் | : | டாக்டர் சு.நரேந்திரன் |
| அரசியலில் | : | பேரா.த. ஜெயராமன் |

*பிற்பகல் 3.30 முதல் 5.00 மணி வரை*

**கவியரங்கம்**

பங்கேற்போர்:

*தலைமை:* கவிஞர் தமிழேந்தி

தரங்கை பன்னீர்செல்வம், புதுவை தமிழ்நெஞ்சன்,

புதுவை தமிழ்மணி, பழனி, எழில்மாறன், மன்னர்மன்னன்

வே.இரா.பூபதி, இரே. இளங்கோவன், எஸ்.ஏ.அழகிரி

**மாலை 5.30 மணி இன எழுச்சிப் பொது மாநாடு**

பங்கேற்போர்:

தலைமை: நாக. இரகுபதி

பழ.நெடுமாறன், திருவாரூர் தங்கராசு,
நா.அருணாச்சலம், ஆனூர் ஜெகதீசன்,
கு.இராமகிருஷ்ணன், பெ.மணியரசன்
விடுதலை இராசேந்திரன், நா.சா. அழகிரி
புலவர் வே.புகழேந்தி

**ஆயத்தமாவீர்! அணிஅணியாய் வாரீர்! தந்தை பெரியார் பகுத்தறிவு மையம், மயிலாடுதுறை**

*தொடர்புக்கு:* நாக. இரகுபதி, *6/2 அவல்காரத் தெரு, மலர் ஒளியச்சு நகலகம், கச்சேரி சாலை, (செல்வா விடுதி)*

*மயிலாடுதுறை - தொலைபேசி: வீடு; 23876, அலுவலகம்: 42928*

படிப்பகம்

www.padippakam.com



## மடல்கள்

அன்பினிய தோழர் அவர்களுக்கு வணக்கம்.

தமிழ், தமிழ்நாடு, தமிழினம் என்று சொல்லி, நாற்காலியைப் பிடித்த திராவிடக் கட்சிகள் ஆட்சி செய்த லட்சணத்தை எண்ணிப் பார்க்கிறபோது, இறுதியில் நமக்குக் கோபம்தான் மிஞ்சுகிறது என்பதற்கு இன்னொரு உதாரணம், மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ் வாழ்த்துப் பாடலைச் சிதைத்த கொடுமை. ஆட்சியாளர்கள் மற்றும் அவரது சந்ததியினரின் உல்லாச வாழ்க்கைக்கும் சுருட்டிய சொத்துக்களின் பாதுகாப்பிற்கும் தமிழையும் தமிழினத்தையும் தோணியாக்கிக் கொண்ட துரோகிகளுக்கு ஒரு சில தமிழ் அமைப்புகளும், பெரியாரிய அமைப்புக்களும் காவடி தூக்கத் துணிந்திருப்பது வருந்தத்தக்கது. தமிழ்த் தேசியப் போராட்டம் மீண்டும் ஒருமுறை வழிமாறிப் போய் விடாமல் பார்த்துக் கொள்வதும் காத்துக் கொள்வதும் நமது கடமை.

அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு, 'மானமும் அறிவும் உள்ள தமிழா! ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழியாத தமிழைப் படி! தமிழையே எங்கும் பாடு!' என்பது போன்ற கருத்துப் பெட்டகங்கள் காலத்தின் தேவை. இனியும் தொடர்க!

ருத்ரன், காவேரிப்பட்டினம்.

மதிப்புமிகு அய்யா அவர்கள் அன்புடன் அறிவது,

மே இதழ் சிந்தனையாளன் வந்தது. இதன் ஆசிரிய உரை வரும் முன் காக்க வேண்டிய பல உண்மைகளை நன்கு எடுத்துரைத்தது. இது தொடர்பாக எங்கள் ஊரில் நடந்து வரும் ஒரு அநீதி கூறுகின்றேன் கேளுங்க! எங்கள் ஊர் தேசிய நெடுஞ்சாலை-45ல் அமைந்துள்ளது. நல்ல குடிநீர் வளமிக்க ஊராக இருந்து வந்த இந்த ஊரில் இப்போதும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம். ஏன் இந்த நிலை என்றால்... 'டீம்' கம்பெனி ஒன்று ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ளது. ஒரே ஒரு பொருளைத் தயார் செய்து வந்த இந்தக் கம்பெனி சில ஆண்டுகளாக 'டீமின் தெள்ளிய குடிநீர்' (டீம் வாட்டர்) என்ற பெயரில் 100 மில்லி, 1 லிட்டர், 12 லிட்டர் என்ற வகையில் தினம் தோறும் பல இலட்சம் லிட்டர் தண்ணீரைப் பல நவீன வெளிநாட்டு இயந்திரங்கள் உதவியுடன் நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பனை செய்து வருகின்றது.

இப்படிச் செய்வதால் ஊரின் கிணறுகளில் சுத்தமாக நீர் இல்லை. குழாய் நீரை மட்டும் நம்பி மக்கள் மிக அவதிப்படுகிறார்கள். ஊர் மக்களோ, ஊராட்சி மன்றமோ, இதனைக் கேட்பதில்லை. காரணம், ஊரில் கோயில் கட்ட பல இலட்சம் நன்கொடை கொடுத்து ஊர் வாயை அடைத்து விடுகிறார்கள்! இந்தக் கம்பெனி உரிமையாளர் ஒரு கன்னடப் பார்ப்பான்! தீவிரமான பங்காரு அடிகள் பக்தர்! பெயர் கிருஷ்ணமூர்த்தி ராவ்! ஊர் மக்களே நல்ல நீர் தேவை என்றால் பணம் கொடுத்து இந்த ஊர் தண்ணீரை இந்தக் கம்பெனியிடம் வாங்கித் தான் குடிக்க வேண்டும். ஆக உள்ளூர் நீரே உள்ளூர் மக்களுக்குக் காசு கொடுத்தால் கிடைக்கும் என்ற நிலை!

இது கொடுமை! கொடுமை!

-ச.நாத்திக நந்தனார்
வண்டலூர்

## 'அயோத்திதாசர் சிந்தனைகள்' நூலின் தொகுப்பாசிரியர் ஞான. அலாய்சியஸ் பாராட்டுவிழா




17.5.2001 அன்று மாலை 6 மணிக்கு, திருவல்லிக்கேணி தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியக் கூட்ட அரங்கில் 'அயோத்திதாசர் சிந்தனைகள்' நூலின் தொகுப்பாசிரியர் ஞான. அலாய்சியஸ் பாராட்டு விழா, வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. அன்பு பொன்னோவியன் , எரிமலை ஏ.இரத்தினம், கவிஞர் தமிழேந்தி ஆகிய தோழர்கள் பாராட்டுரை நல்கினர். தோழர் ஞான அலாய்சியஸ் ஏற்புரை ஆற்றினார். கலசம் வரவேற்க, வாலாசா வல்லவன் நன்றி கூறினார். மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் திருச்சி சிந்தனையாளர் கழகமும் இணைந்து விழாவினை ஏற்பாடு செய்திருந்தன.

செய்தி: கோ.அருண்மொழி

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஜூன் - 2001

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்-இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 25.00 |
| தி.நா. பவழக்குறிஞ்சி | சென்னை | 100.00 |
| கோ. தமிழ்ப்பையன் | காஞ்சிபுரம் | 20.00 |
| சிதம்பரன்.கி. | ஈரோடு | 50.00 |
| மின்னல்கிழார் | பூட்டுத்தாக்கு | 10.00 |
| பச்சையம்மாள் -இராமசாமி திருமண மகிழ்வாக | சிறுநாத்தூர் | 100.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

### எழுத்தாளர் பாமாவுக்கு விருது

சிறந்த பெண்ணிய எழுத்தாளரும் தலித் விடுதலையில் பேரார்வம் கொண்டவரும் ஆகிய பாமா எழுதிய 'கருக்கு' என்னும் நெடுங்கதைக்கு 2000 ஆவது ஆண்டின் 'கிராஸ் வெர்ட்' புத்தக விருதும், விருதோடு ரூபாய் ஒன்றரை இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. அவரது நெடுங்கதை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது சிறப்புக் குரிய ஒன்றாகும்.

### வே.மு. பிச்சாண்டி நினைவேந்தல் நிகழ்ச்சி

இந்தி எதிர்ப்புப் போராட்ட மறவர் வேலம் மு.பிச்சாண்டி 3.5.2001 அன்று மறைவுற்றார். மறுநாள் அவருடைய உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கண்களும் உடலும் வேலூர் சி.எம்.சி. மருத்துவக் கல்லூரிக்குக் கொடையாக வழங்கப்பட்டன. அன்னாரின் நினைவேந்தல் நிகழ்ச்சி 23.5.2001 அன்று காலை இராணிப்பேட்டையில் நடைபெற்றது. தோழர்கள் செங்கதிர், மா.செ. தமிழ்மணி, புலவர் குமரத்தன்னொளியன், வாலாசா வல்லவன், தமிழ்க்குமரன், பெ. தனராசு, பொ.பெருமாள், சோமு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மறைந்த வே.மு. பிச்சாண்டி அவர்களின் பிள்ளைகளான புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்கள் ச.பி. இளங்கோவன், ச.பி. அரசமாணிக்கம் ஆகிய இருவரும் படத் திறப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். புலவர் மு.கலைச்செல்வம் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: ;852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001



# தமிழா! தமிழா!



பொற்கால
ஆட்சி
தொடருமென்ற
கனவு
பொய்த்துப் போனது
தமிழா தமிழா

சாதிக் கூட்டணி
அல்ல; இது
சாதிக்கும் கூட்டணி
என்ற உளறல்
தரைமட்டமானது
தமிழா தமிழா

சாலை போட்டதைப்
பாலங் கட்டியதைச்
சாதனையாய்ச்
சொன்னாயே
தமிழா தமிழா

கூலி விவசாயி
கும்பி எரியவும்
நகர்ப்புறத்
தொழிலாளி
நசுங்கிச் சாகவும்
ஆன வாழ்க்கை
அவலத்துக்கு நீ
பக்கத்திலிருந்த
ப. சிதம்பரத்திடம்
பதில் கேட்டாயா
தமிழா தமிழா

தமிழனுக்காகவே
பேசிப் பேசி
தமிழனுக்காகவே
எழுதி எழுதி
ஓய்ந்துபோனதாய்
உருகுகிறாய் தமிழா

வீழ்ச்சியின் காரணம்
விளங்கலையா தமிழா
கறுப்பு நிறத்தால்
அறியப்பட்டநீ
காவியின் பிடியில்
சிக்கினாயே தமிழா

சென்னை மகனுக்கு
தமிழ்நாடு தனக்கு
மத்தி மருகனுக்கு!
பாடை வரையில்
பதவி தரலன்றி
இந்த
ஓட்டை அதிகாரம்
எதற்குதவும் தமிழா

கணினி மென்பொருள்
டைடல் பூங்கா
இந்தக்
காகிதக் கப்பல்களில்
கரை சேர நினைத்தாய்
ஊழல் ஊழல் என
ஓயாமல் கத்தினாய்
பசித்த காதுகளை - இது
பற்றவில்லை தமிழா

குப்புற உன்தன்
நாற்காலி
கவிழ்த்தவர்கள்
கொள்ளிக் கட்டையைக்
கூடத்து விளக்காகக்
கொண்டுவர நீயுந்தான்
காரணண்டா தமிழா!

சூடுசொரணை இந்த
இனத்துக்கு இருந்தால்
மண்சோறு சாப்பிட்டோர்
மந்திரிமார் ஆவாரா?

மரணப் படுக்கையில்
இருந்த மூப்பனார்
மல்லுவேட்டி
மைனராய்
மீண்டும் எழுவாரா?

ஆங்கிலத்துக்கு
ஆதரவாய் அறிக்கை
இரத்தத்தில் ஊறிய

ஈழ எதிர்ப்பு
தமிழ்மொழி
தமிழினம்
என்று பேசினால்
தடாலடியாய்ப்
பாயும் தடா
அகம்பாவம்
ஆணவமே
அணிகலனாய்,
தோழியுடனான
பந்தம் தொடர
மக்கள் ஆதரவு
தனக்கென்னும்
மமதையுடன்
சிந்திக்கும் தமிழனைச்
செருப்பால்
அறைந்ததுபோல்
அமைந்துவிட்டது
அம்மாவின் ஆட்சி

எடுத்த சபதம் முடித்த
மொட்டையன் 'சோ' -மகிழ்வில்
இனநலம் அடக்கம்
இராஜ குரு
வீரமணியார்க்கோ
தன்னலமாய் எண்ணுவதே
வழக்கம்
வட்டித் தொழிலில்-
கல்வி வணிகத்தில்
இனிக்
கிட்டவர முடியாது
மார்வாடியாலும்!
கிழவன் பெயர் இதிலே
கிழிபடுதல் கொடுமை
அடிப்படைத் தமிழனே
அடங்கிக் கிடப்பாயா?
தீமை பொசுக்கத்
திமிரி எழுவாயா?

— தமிழேந்தி



படிப்பகம்